

யது தயாரிக்கப்பட்ட
தரமான நிகழ்ச்சிகள் சில நூறு பேருடன



போதுமானதல்ல.

**சிவா சின்னத்தம்பி**
சிறப்பாசிரியர்

$1 .50

# ரோஜா

மலர்: 3 இதழ்: 11 பங்குனி 1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரடைஸ் அச்சகம்

உங்களுக்குத் தேவையான
அனைத்து அச்சடிப்புத்
தேவைகளுக்கும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்


குறைந்த விலை
நிறைந்த தரம்



Paradise Print Plus

1231 Ellesmere Rd., Unit. 201
Scarborough, ON
Tel: 416-288-6449
Fax: 416-288-0595

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உள்ளே ☞


- ஈழத்தில்... (அரசியல் கட்டுரை) - 03
- நவீன ஓவியம் - 07
- கொலை வெறி ஒன்றே... (கவிதை) - 08
- இலக்கிய உறவுகள் (கட்டுரை) - 09
- மதங்கள் தேவையில்லை (கவிதை) - 12
- புதிய எழுத்தாளர் அறிமுகம் - 13
- இன்ரர் நெற் (விஞ்ஞானம்) - 14
- தகவல்காரரர் (குறுநாவல்) - 20
- சிறுவர் பூங்கா - 23
- ஆசிரியர் பேனா - 26
- வாசகர் பேனா - 27
- CTBC நிகழ்ச்சிகள் - 28
- சிறப்பாசிரியர் பக்கம் - 41
- புற உருவங்கள்... (கவிதை) - 52
- மகளிர் பூங்கா - 53
- விழாக்கள் - 57
- தொழில் நுட்பம் - 58
- விளையாட்டு - 60
- சொற் சிலம்பம் - 63


**இம்மாத சிறப்பாசிரியர்**
**சிவா சின்னத்தம்பி**
**41 - 52**

**CTBC**
**நிகழ்ச்சிகள்**
**28 - 37**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஓம்

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும்
கனேடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்** (ஐயாமணி)
(புங்குடுதீவு - 10)

(416) 266 3333



(416) 266 3333

அனைத்து இந்து மத கிரியைகளுக்கும், திருமணம் போன்ற மங்களகரமான வைபவங்களுக்கு வேண்டிய அனைத்துத் தேவைகட்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். இத்துடன் குறைந்த வாடகையில் ஸ்காபுரோ, ரொறன்ரோ இடங்களில் மண்டப வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

கல்யாண மண்டபம், மணவறை, பந்தல் அலங்காரம், பூமாலை, ஆண்டாள் மாலை, சடைநாகம், தலைப்பாகை, தலைநகை, பூஜைக்குரிய பொருட்கள் இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**628 E Birchmount Road, Scarborough, ON. M1K 1P9**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களுக்கு அரசியல் தீர்வு! விடுதலைப் புலிகளுக்கு ராணுவத் தீர்வு!- சந்திரிகா அரசின் சித்தாந்தம் இது. தமிழ் தேசியத்தின் கலசமாக இருந்து , அதை பாதுகாத்து வளர்த்துவரும் விடுதலைப்புலிகள் இயக்கத்தை சிங்களப் பேரினவாதிகள் அழிக்க நினைக்கின்றனர். அந்தப் போரில் தமிழ் தேசிய இனத்தையே ஒழிக்க வழி செய்கின்றனர். தமிழ் மக்களையும் புலிகளையும் பிரிப்பது என்ற கொழும்பு அரசின் திட்டம் இப்போது 3 லட்சத்துக்கும்மேல் தமிழ் மக்களை, வீடுகளை விட்டு வெளியேற்றி, தட்டுமுட்டு சாமான்களுடன், குழந்தை, குட்டி, முதியோருடன், பெண்களுடன் தெருவுக்கு விரட்டி, யாழ்நகரை விட்டே தென்மராட்சிக்கு துரத்தியுள்ளது. வீடுகளில் வந்து விழும்

## ஈழத்தில்...

ஆமிக்காரர்களின் பீரங்கி ஷெல்கள் தமிழ் மக்களை விரட்டுகிறது. இதுதான் புலிகளுடனான யுத்தமா? இல்லை தமிழ்மக்களை அழிக்கத் துடிக்கும் ராணுவத்தின் கொடூரம்.

யாழ்ப்பாணத்தினருக்கு கொழும்பு ஏஜண்ட் பொன்னம்பலம், சந்திரிகா அரசிடம் மண்டியிடுகிறார் "65 விழுக்காடு தமிழ்மக்கள் யாழ்நரை விட்டு இடம் பெயர்கின்றனர். உணவு இல்லை, வீடு இல்லை மக்களை அழிப்பதை உடன் நிறுத்துங்கள். தென்மராட்சி பகுதியை அகதிகள் தங்க பாதுகாப்பு இடமாக அரசு அறிவிக்க வேண்டும்" என்று கெஞ்சுகிறார். சிங்களப் பேரினவாத ராணுவ அதிகாரிகளோ" புலிகளும் அகதிகளாக வரும் தமிழர்களுடன் தென்மராட்சிக்கு வருகிறார்கள். தென்மராட்சியில் மக்களுக்கு பாதுகாப்பு ஏற்பாட்டிற்கென புலிப்படை முடிவெடுத்துள்ளது. அதை கவர்மெண்ட் ஏஜண்ட் மூலம் சொல்ல வைக்கிறார்கள்" என்றுகூறுகிறார்கள்.

உள்ளபடியே என்ன உண்மை நிலை என பல முனைகளையும் தொடர்பு கொண்டு, வவுனியாவிலிருந்து நண்பர்கள் தொலைத் தொடர்பில் கூறிய சமீபத்தில் செய்தி வரை எடுக்கும்போது நிலைமை மோசமாகத்தான் உள்ளது என்பதை உணரமுடியும்.

பலாலி ராணுவ முகாமிலிருந்து ராணுவம் எந்நேரமும் வெளியேறி தாக்கலாமென்பது யாழில் புலிகளால் எதிர்பார்க்கப்பட்டது. பலாலி முகாமைச்சுற்றி அரை கிலோமீட்டர் தூரத்திற்கு புலிகள் கண்ணிவெடிகளைப் புதைத்து வைத்திருந்தனர். கொழும்பு அரசாங்கம் திட்டமிட்டது. தனது முப்படைத் தலைமையை அனுராதபுரத்திற்கு மாற்றியது. யாழ் முற்றுகைக்காக 35,000 ராணுவ வீரர்களைக் களத்திலிறக்கியது. இது எண்ணிக்கையில் புலிப்படையைவிட அதிக அளவில் பெரியது. பலாலி முகாமிலிருந்து புறப்படும் ராணுவத்திற்கு உதவி செய்ய கடல்வழியாக ராணுவம் தனது படை- களையும், ஆயுதங்களையும் முதலில் சப்ளை செய்தது. கடல் பகுதி அருகே, காரை நகர் வழியாக அறாலி, சுழிபுரம், சங்காணை, மாதகல், மானிப்பாய், நவாலி வழியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்நகர் நுழைய ராணுவம் முதலில் திட்டமிட்டது. அந்த திட்டப்படி சங்காணை வரை ராணுவம் முன்னேறியது. புலிப்படை பதிலடி கொடுத்தது. கடல் வழியில் கடற்புலிகள் தாக்குதல் தீவிரமானது.

அழிக்க யாழ் நகருக்குள் நுழையும் போது, பலத்த எதிர்ப்பைக் கொடுத்து இந்தியப்படையையே திருப்பி விரட்ட உதவியது. அந்த அளவு புலிகளின் கோட்டையாக இருந்தது நீர்வேலி. நீர்வேலியில், பெண்புலிப் படையின்



கல்லியாய் வரைவந்த ராணுவம் திணறியது. பின்வாங்கியது. அதை புலிப்பாய்ச்சலின் வெற்றியாக தமிழ் நெஞ்சங்கள் அக மகிழ்ந்தன. இப்போ ராணுவம் தனது பாதையை மாற்றிவிட்டது. அச்சுவேலி வழியாக யாழ் நோக்கி முன்னேறியது. அரை கிலோமீட்டர் வரை புலிகள் வைத்திருந்த கண்ணிவெடிகளை பொறுமையாக அகற்றியபின் மக்கள் வாழும் பகுதிகளான அச்சுவேலி நோக்கி முன்னேறியது. ஷெல் அடித்துக் கொண்டே வந்தது. மக்கள் வாழும் பகுதிகள் என்பதால் கண்ணி வெடிகளை புதைத்து வைத்திருக்கவில்லை. இது ராணுவ முன்னேற்றத்துக்கு வசதியாய் போய்விட்டது. நீர்வேலிக்குள் நுழைந்தார்கள். இதே நீர்வேலிதான் இந்திய அமைதிப்படை புலிகளை

தலைமைப் பயிற்சி முகாம் இயங்கி வந்தது.

நீர்வேலியில் பூமிக்கடியில் இயங்கிவந்த புலிகளின் மருத்துவமனை, புலிப்படை ஆட்சியின் தலைமைச் செயலகம் எல்லாமே போர்க்கால வேகத்தில் பிரபாகரனின் உத்தரவின் கீழ் இடமாற்றம் செய்யப்பட்டன. நீர்வேலியை அடுத்த கோப்பாய், உரும்பிராய், நல்லூர் (பிரபல முருகன் கோயில் இருக்குமிடம்) ஆகிய ஊர்களில் ஜனநெருக்கடி அதிகமாக உண்டு. இந்த ஊர்களிலுள்ள தமிழ் மக்கள் வீடுகளை காலிசெய்து கொண்டு, ஊரைவிட்டு புறப்பட்டு விட்டனர்.

பயங்கரமான மழை யாழ்குடா முழுமையாக அடித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரண்டிருக்கிறது. இந்த பலத்த மழையில் சிங்கள ராணுவமும் சரி, புலிகளும் சரி, இயங்குவதற்கே கடினமாக இருக்கிறது. இந்த கடுமையான மழை லட்சக்கணக்கில் வீடுகளைவிட்டு வெளியேறிய தமிழ் மக்களிடையே 'கொள்ளை நோயை' ஏற்படுத்தி வருகிறது.

தென்மராட்சிக்கும், சாவகச்சேரிக்கும் தமிழ்மக்கள் குவிந்து வருகிறார்கள். அளவெட்டி, தெல்லிப்பளை பகுதிகளிலும் உருக்குள் நுழைந்த ராணுவம் அங்கேயே ராணுவ முகாமை ஏற்படுத்தியுள்ளது. தென்மராட்சியில் எங்கு நோக்கிலும் மனிதத் தலைகளாக உள்ளன என்று வவுனியாவிலிருந்து தெலைபேசியில் பேசிய நமது நண்பர் குறிப்பிட்டார்.

பரவி வரும் நோய், மழை, ஜனநெருக்கடி, மருந்துகள் கிடைக்காமலும் உணவு கிடைக்காமலும் தமிழ் மக்கள் அன்றாடம் பல பத்துப்பேர் சாகும் நிலை அச்சுறுத்தி வருகிறது. ஈவிரக்கமற்ற சிங்களப் பேரினவாத அரசினுடைய இந்த அராஜகச் செயல் தமிழினத்தை அழிப்பதற்கான திட்டமிட்ட சதி என்பதை இன்று அனைத்து தமிழ் மக்களும் உணர்ந்து விட்டார்கள்.

புலிப்படை இப்போது ராணுவத்தை சந்திக்க புதிய திட்டங்களை போடத் துவங்கிவிட்டது. ஒருபுறம் தனது பிரதானப் படைச்சக்திகளை பின்வாங்கிக் கொண்டு, நாடு தழுவிய கொரில்லாப் போராட்டத்திற்கு தயாராகும் அதே வேளையில், இன்னொருபுறம், முன்னேறி வரும் சிங்கள ராணுவத்தை தடுத்து நிறுத்த, சேதப்படுத்த பின்ஓடவைக்க புதிய தந்திரங்களை போட்டுள்ளது. உரும்பிராய், ஊரழு ஆகிய ஊர் பகுதிகளிலும், யாழ் நகருக்கு உள்ளேயும், ஜனநடமாட்டம் இடமாறிச் செல்வதால் புலிகள் கண்ணிவெடிகளை விரைந்து சாலையின் இருபுறமும், ராணுவம் முன்னேறிவரும் முள் பகுதிகளிலும் புதைக்க தொடங்கி விட்டனர். மகிழ்ச்சியில் முன்னேறிய ராணுவம் கால்வைத்த இடமெல்லாம் கண்ணிவெடி, தாக்குதல் என





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கொள்கிறது. மக்கள் அதிகமில்லாத யாழ் வட்டாரத்தில் புலிகள் நடத்தும் கொரில்லாத் தாக்குதலை தாக்குப்பிடிக்க முடியாமல் ராணுவம் ஓடப்போவது உறுதி. யாழ் நகருக்குள் ராணுவம் நுழைந்து நிலத்தைக் கைப்பற்றியதில் பயனில்லை என அரசு அதிகாரிகள் நினைக்கிறார்கள். அதே சமயம் கொழும்பு வட்டாரத்தில் உயர் ராணுவ அதிகாரிகள் சிங்களப் பேரினவாத வெறியுடன் திட்டமிடுகிறார்கள். தென்மாராட்சியில் புலிகள் மக்களுக்கு மத்தியில் பாதுகாப்பு தேடுவார்களேயானால் ஆனையிறவு ராணுவ முகாமிலிருந்து தென்மராடச்சி மீது ஷெல் அடித்து தமிழ் மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்குவோம் என கொக்கரிக்கிறார்கள்.

அகதிகளாக ஓடிவரும் தமிழ் மக்கள் இந்தியா நோக்கிக் கடல்வழியாக வந்து விடமுடியாதா என்று நாம் வினவியபோது, கொழும்பு வட்டாரம் அதற்கான வாய்புகளும் அடைக்கப்பட்டுள்ளன என்றது.

மானிப்பாய் அருகே மாதகல் வழியாகத்தான் தப்பி செல்லும் தமிழ் மக்கள் கடற்கரைக்கு வரவேண்டும். அந்தப் பகுதியிலும் ராணுவம் அடைக்துத் கொண்டிருப்பதால் அதுவும் சாத்தியமில்லை என்றனர். தென்மாராச்சியில் குவிந்திருக்கும் லட்சக்கணக்கான தமிழ் மக்களுக்கு, முதியோருக்கு, பெண்கள், குழந்தைகளுக்கு இந்த உலகம் என்ன செய்யப்போகிறது.

ரத்ததானம், மருந்துகள், உணவுப் பொட்டலங்கள் போதுமா?

சந்திரிகா அரசே உடனடியாக போரை நிறுத்து என நிர்ப்பந்திக்க வேண்டுமா?

யார் நிர்ப்பந்திப்பது?

ஐ. நா செயளாலர் அறைகூவலை சந்திரிகா அரசு ஏற்குமா?

அருகேயுள்ள டெல்லியின் மன்னர் நரசிம்மராவ் நிர்ப்பந்தம் கொடுத்தால் சிங்கள அரசு போரை நிறுத்தும் என்பது ஆதாரபூர்வமாகத் தெரிகிறது.

இன்று கொழும்பு அரசுகள் நடத்தும் யுத்தமே, டெல்லியின் முழுமையான உத்தரவாதம், வழிகாட்டல் ஒத்துழைப்பு ஆகிய அடிப்படையில் தான் என்பதால் இந்த எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடையே இருக்கிறது. அகாலி தளத்தின் தலைவர் மான் கூறியுள்ளார். "இந்திய அரசின் முழு உதவியோடுதான் சந்திரிகா அரசு தமிழின படுகொலையை நடத்துகிறது. நாம் தமிழகத்தில் என்னதான் எதிர்ப்புக் குரலை கிளப்பினாலும், இலங்கை அரசு 'பாங்க் ஆ.்.ப் சிலோன்' என்ற வங்கியைச், சென்னையில் புகுந்தமல்லி நெடுஞ்சாலையில் திறந்து இங்குள்ள தமிழரையும் சுரண்ட வருகிறோம் என அறிவித்துக் கொண்டுதானே இருக்கிறது. இதற்கு டெல்லி அரசும் ஒத்துழைக்கத்தானே செய்கிறது.

தமிழகம் தன் எதிர்ப்பை காண்பிக்க வேறு முறைகளை கையாள வேண்டிய நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

**~ காமராஜ்**

நன்றி: நக்கீரன்

உலகில் அதிக திரையரங்குகளைக் கொண்ட தியேட்டர் எங்கே உளளது தெரியுமா? * ரொறன்ரோவில் உள்ள ஈற்றன் சென்ரரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த நவீன ஓவியத்திற்குள் ஒரு கவிதை புதைந்து கிடக்கிறது.
கவிதைக்கு மறுபக்கம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலை வெறி ஒன்றே குறிக்கோளானது!...

மனிதம் பாதியாய் மரித்துப்போனது!..
கண்களை இழந்து கபாலமாய்ப் போனது!..
நரபலி ஒன்றே முழு நினைவாக
மனித உணர்வு மறைந்து போனது!..
அமைதியை இழந்து அழகினை இழந்து
கொலைவெறி ஒன்றே குறிக்கோளானது!...
கொலைக்குக் கூடக் குஞ்சங்கள் கட்டி
புரட்சி என்றொரு புதுப்பெயர் வந்தது!...
மனித உருவில் மிருக பலங்கள்
துவக்குகளோடு ஊர்வலம் போயின!...
முகங்களைத் தொலைத்து விலங்குகளானதில்
விலங்குகள் கூட வெட்கமடைந்தன!..
இந்த நெருப்பை எரிப்பவர் எவரோ?
இந்த உணர்வினை அழிப்பவர் எவரோ?
மனித நேயத்தை மண்ணிலே தூவி
மலர் எழில் சோலையாய் மாற்றுவோர் எவரோ?
சூழ்ந்திருப்பது மட்டுமல்ல.............
எதிர்காலம் கூட இருட்டுத்தான்!

~ நிலா குககதாசன்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கவிஞர் வி. கந்தவனம் அவர்களின்

# இலக்கிய உறவுகள்

## 7. மாத்தளை இலக்கிய வட்டம்

மாத்தளை இலங்கையின் மலை-நாட்டுப் பகுதியின் வடக்கு வாயில். கொக்கோ, இறப்பர் போன்ற பெருந் தோட்ட பயிர்களின் வளத்தில் திளைக்கும் குபேரக் குறிஞ்சி. செழிப்பான இயற்கையின் சித்திரக் கூடம். சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் ஒற்றுமையுடன் சேர்ந்து வாழும் செம்புலம்.

நகரத்தில் பல பாடசாலைகள். மிகவும் வசதி படைத்தது புனித தோமையர் கல்லூரி. இங்கு நான் ஆசிரியராக பணிபுரிந்த காலத்தில் (1958-1964) பல அரிய இலக்கிய நெஞ்சங்களுடன் உறவாட நேர்ந்தது. இவர்களுடன் சேர்ந்து மாத்தளையில் மட்டுமல்லாது மலைநாடு முழுவதும் மேற்கொண்ட இலக்கிய முயற்சிகள் எனது இளமைக் கால எழுச்சியின் கோலங்கள்; தமிழ் உணர்ச்சியின் தாளங்கள்.

1959ம் ஆண்டின் நடுப்பகுதியில் இரு அன்பர்கள் என்னைக்காண வந்தனர். ஒருவர் முதியவர். மற்றவர் என்னில் இளையவர். முதியவர் கவிஞர் சு சொக்கநாதன். இளையவர் கவிஞர் ஈழவாணன். முதற் சந்திப்பிலேயே நெடுங்கால நண்பர்களைப் போலப் பேசி உள்ளத்தைக் கொள்ளை கொண்டனர். இது எழுத்தாளர்களின் தனிச் சிறப்பு. தங்களின் கவிதைகள் சிலவற்றைத் தந்து அவை பற்றிய எனது மதிப்பீட்டை அடுத்த சந்திப்பில் கூறும் படி கேட்டுச் சென்றனர்.

சந்திப்புகள் அடிக்கடி தொடர்ந்தன. மூவரும் சேர்ந்து இன்னுஞ் சில இலக்கிய ஆவலர்களின் உதவியுடன் அதே ஆண்டில் மாத்தளை இலக்கிய வட்டம் என்ற அமைப்பைத் தோற்றுவித்தோம். 1960ம் ஆண்டில் புனித தோமையர் கல்லூரியில் இலக்கிய வட்டம் நடத்திய பாரதி விழா மாத்தளையில் பெரும் சலசலப்பை உண்டு பண்ணியது. கவியரங்கத்தில் ஈழவாணன் அவர்கள் பெண்களின் புதுமைக் கொண்டைகளையும் போலி நாகரீகத்தையும் கிண்டல் செய்து பாடினார். பதிலுக்குப் பட்டணத்து இளம் பெண்கள் கவிஞரைத் தூற்றிப் பேசித் திரியலாகினர். கவியரங்கத்துக்குத் தலைமைவகித்த என்னையும் வம்புக்கிழுத்தனர். எள்ளோடு சேர்ந்து எலிப்புழுக்கையும் காய்ந்த கதையாயிற்று என்பாடு. இருப்பினும் எமது கவியங்கம் சமுகத்தில் இப்படியொரு தாக்கத்தை ஏற்படுத்தியது குறித்து எமக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது.

1962ல் மூன்று பேரும் 'முக்கவிஞர் வெளியீடு' என்றவொரு கூட்டமைப்பை ஆரம்பித்தோம். அடுத் ஆண்டே மூவரும் பாடி வைத்திருந்த கவிதைகளிற் சில வற்றைத் தொகுத்து "சிட்டுக் குருவி" என்ற மகுடத்தில் வெளியிட்டோம். இத் தெகுதி வெளிவர மிகவும் உதவியாக இருந்தவர்கள் ஜனாப் N.M.M. பவ்சர் அவர்களும் பதிப்பாசிரியர் ஜனாப் மு. கீ. அவர்களுமாவர்.

மூவரும் சேர்ந்து மலைநாட்டுப் பகுதியில் பல கவியரங்குகளிற் பங்குபற்றித் தமிழ் மக்கள் மத்தியில் கவிதா இரசனையையும் தமிழ்ப் பற்றினையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டோம்.

கவிஞர் சொக்கநாதன் அவர்கள் நவாலியூரைச் சேர்ந்தவர். பழைய இலக்கியங்களின்பான்மை அறிந்தவர். பண்பும் பக்குவமும் மிகுந்தவர். அடிக்கடி தனியாகவோ ஈழவேந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடனோ என்னைச் சந்திக்க வருவார். புன்முறுவல் பூத்த அவரது முகம் களைப்புடன் கல்லூரியிலிருந்து வரும் எனக்குப் புத்துணர்வை ஊட்டும்.

கவிஞர் சொக்கநாதன் அவர்கள் அப்பழுக்கற்ற ஒரு மரபுக் கவிஞர். சொக்க வைக்கும் சொல்வளம் உடையவர். நன்னய நகைச்சுவை அவரது கவிகளில் நாகரிகஞ் செய்யும். 'சிட்டுக் குருவி' என்னுந் தொகுதியில் இடம்பெற்ற இரது கவிதைகள் அனைத்திலும் இந்த நாகரிகத்தைக் காணலாம். பத்துக்கு 'அடுக்களைக் கருணை காட்டாய்' என்ற கவிதையிலிருந்து ஒரு பாடல்:

பஞ்சணையின் மேலெழுந்து படுக்கச் சென்றால்
பக்கத்தே நீபடுத்துத் துயிலா வண்ணம்
பண்டைநாள் உனைக்கண்டு மயங்கி னோர்தம்
செஞ்சொலினைத் திரவியத்தைத் தேகக் கட்டைத்
திறமையினைச் செப்பிட நீ மேலும் மேலும்
செத்தார்போல் கிடப்பனலாற் சிந்தை நோகேன்
வஞ்சமிலா மக்களினை மடவார் பெற்றால்
மடியுமவர் கட்டழகு வதனச் செம்மை
மதியுமென நீவகுத்த மடமை ஞானம்
நெஞ்சார நீயுணர்த்த மறுத்தொன் றுரையேன்
நித்திரைவிட் டெழுந்தவுடன் நேரே நின்று
நீள்மூஞ்சி காட்டாது நெகிழு வாயேல்.

தமிழ் இலக்கிய மரபு குறித்துப் பெருமைப் படுவதோடு அதனைப் பேணவேண்டும் என்கின்ற நோக்கமும் உடையவர் கவிஞர் சொக்கநாதன் அவர்கள். இந்த நோக்கத்தின் வெளிப்பாடே அவர் மாத்தளை முத்துமாரி அம்மன் மீது பாடிய குறவஞ்சி பள்ளு, குறவஞ்சி உலா முதலாய இலக்கிய வடிவங்கள் இக்காலத்துக்கு உதவாவெனக் கருதுவாருமுளர். இவர்கள் மாத்தளை முத்துமாரி அம்மன் குறவஞ்சியைக் கொஞ்சம் படித்துப் பார்த்தல் நல்லது. இந்தக் காலத்துக்கு மட்டுமல்லாது எந்தக் காலத்துக்கும் குறவஞ்சி பொருந்தக்கூடிய இலக்கியமே என்பதனைச் சொக்கநாதன் அவர்கள் காட்டியிருக்கும் விதம் பாராட்டுதற் குரியதொன்று.

கவிஞர் சொக்கநாதன் அவர்கள் வடமுனைவு என்றால் கவிஞர் ஈழவாணன் அவர்கள் தென்முனைவு. நான் மத்திய கோட்டில் நின்று இவர்களைச் சமாதானம் செய்த கட்டங்கள் பல. எனினும் இலக்கிய கொள்கை வேறுபாடுகள் எமது நட்புறவை என்றுமே பாதித்ததில்லை. எவ்வளவுக் கெவ்வளவு விவாதங்கள் செய்தோமோ அவ்வளவுக் கவ்வளவு எமது பக்குவப் படிகள் உயர்ந்து கொண்டே சென்றன. உறவுகள் வளர்ந்துகொண்டே போயின.

கவிஞர் ஈழவாணன் அவர்கள் திருகோணமலையைச் சேர்ந்தவர். தருமராஜா என்பது இவரது உண்மைப் பெயர். மாத்தளையில் உறவினருடன் தங்கியிருந்தார். பழகுதற்கு இனியவர். முற்போக்குச் சிந்தனையுள்ளவர். ஈழத்துத் தற்கால இலக்கியத்தில் தக்க பயிற்சியுள்ளவர். வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகளின் வார இதழ்களில் வரும் கவிதைகள், கதைகள், விமர்சனக் கட்டுரைகள் என்பவற்றை எழுத்தெண்ணிப் படிப்பார். எமது சந்திப்புக்களில் அவைபற்றி அலசுவோம்.

### குடும்ப சுமை

பொறுப்பு இன்றி - சுற்றும்
தன் மகனை
எருமை - என்று
திட்டிய தந்தை
வருத்தப்பட்டார்!

எருமையென்றாலும்
பொதி சுமக்கிறதே!...

~ சுரேஸ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் நா ஓயாது. என் செவிகள் சலிக்கா.

ஆய் எமைப் பார் இவண்
மாய் வதைப்பார் வெறும்
ஆடுகள் மாடுகள் போல்

என்று அந்தப் பாடல் தொடங்கும். ஒரு தோட்டத் தொழிலாளி தனது அல்லல் மிகுந்த வாழ்க்கை முறையை மாத்தளை முத்துமாரி அம்மனிடம் முறையிடுவது போன்று அமைந்தது அந்தப் பாடல். கோயிற் கொடியேற்றத்தையொட்டி அப்பாடல் வெளிவந்தது.

கவிஞர் ஈழவாணன் அவர்கள் அருமையான ஒரு விமர்சகர். 'துறவி' என்ற புனை பெயரில் விமர்சனக் கட்டுரைகள் எழுதியிருக்கின்றார். 'ஈழத்துக் கவிதை விமர்சனம்' என்றவொரு நூலைப் பின்னால் அவர் வெளியிடவில்லை. அவர் அனுபவித்துப் பாராட்டிய அந்தக் கவிதையையும் நான் தவற விட்டுவிட்டேன்.

தத்துவம் வயது முதிர்ந்தவர்களுக்குத்தான் வரும் என்பார்கள். ஈழவாணன் இதற்கு விதிவிலக்கு. இள வயதிலேயே தத்துவ விசாரணையில் அவர் ஈடுபடத் தொடங்கிவிட்டார். கேள்விக்குமேல் கேள்விகள் கேட்பார். நான் அவருக்கு ஓர் உரைகல். சில சிந்தனைகளை முதலில் என்னில் உரைத்துப் பார்த்தபின் தனது கவிதைகளைத் திருத்திய சந்தர்ப்பங்களும் உண்டு. வறுமையின் கொடுமையை இளவயதிலேயே அனுபவித்தவர் அவர். இதனால் அதுவே அவரது தலையாய கவிதைப் பொருளாகவும் அமையலாயிற்று. சிந்தனையைக் கிளறும் அவரது 'அக்கினிப் பூக்கள்' சில பின்வருமாறு:

இதயத் தெரியும் எழுமூச் சிடையே
இளமைகள் சாவதைப்பார்!
இல்லை இவருக்கொரு வாழ்வது என்றால்
இறைவன் இருப்பது மேன்?
வித விதமான மரகத மணிபோல்
வீதியில் அழிவதெனில்
வீசிய அக்கினிப் பூக்களால் இறைவன்
வெந்தே அழிந்திடுக!

* * *

தப்பித் தலைநிமிர்ந்ததால்
தலையிடிக்கும் சிறுவாசல்
உப்புப் பொதிந்துதிரும்
உவர்மணலின் சுவருக்குள்
கப்புமிருள் கரைக்கும்
கைவிளக்கின் பொற்சுடரில்
செப்புக் குடங்களைப்போல்
செல்வர்களின் கண்ணுறக்கம்.

1965ம் ஆண்டு கொழுப்பு பாடப்புத்தக சபையிற் பணியாற்றும்படி கல்வி அமைச்சு என்னைப் பணித்தது. அதனைத் தொடர்ந்து மாத்தளை இலக்கிய வட்டமும் படுத்துக்கொண்டது.

இடத்தால் பிரிந்தாலும் உறவால் முக்கவிஞர்கள் பிரியவில்லை. சுகவீனம் காரணமாகக் கவிஞர் சொக்கநாதன் அவர்களால் தொடர்ந்தும் இலக்கிய முயற்சிகளில் ஈடுபட முடியவில்லை.

ஈழவாணன் அவர்களுக்கும் வேலை யில்லாப் பிரச்சனை. இருப்பினும் அவரது கவிதை ஊற்றுத் தொடர்ந்து பாய்ந்து கொண்டே இருந்தது. 'தினபதி'யில் அவருக்கு வேலை கிடைத்ததைத் தொடர்ந்து திருநெல்வேலியில் திருமணமும் நடந்தது.

கொழும்பில் அவர் குடும்பத்துடன் இருந்த காலத்தில் தனது வீட்டுக்கு ஒருமுறை அழைத்துச் சென்று விருந்து வைத்தார். பேச்சினிடையே அவர் மீண்டும் வேலையில்லாமல் இருப்பது தெரியவந்தது. 'அக்னி' என்ற பெயரில் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்கப் போவதாகவும் கூறினார். வேலை ஒன்று கிடைத்தபின் தொடங்குவது நல்லது என்று ஆலோசனை கூறினேன். அவர் மனைவியும் அதை ஆமோதித்தயு போலத் தெரிந்தது. ஈழவாணன் ஆலோசனையைப் பொருட்படுத்த வில்லை. மற்றொரு சந்திப்பின் போது 'அக்னி' இதழைக் கையில் வைத்தார். 'நினைத்ததை முடிப்பவன் கவிஞன்' என்றேன். வழமையான குலுங்கல் சிரிப்பைக் கொட்டினார். 'சும்மா நாலு வரியைக் கிறுக்கி விட்டுப் புதுக்கவிதை என்கிறார்கள். 'அக்னி' மூலம் அவர்களை எரிக்கப் போகிறேன்; புதுக் கவிதைக்குப் புதிய சக்தியைக் கொடுக்கப் போகிறேன்' என்றார் உறுதியுடன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்கள் தேவையில்லை!



~ கவிஞர். இன்குலாப்

உலகின் அழகை உணரவும் நுகரவும்
மனந்தான் வேண்டும்..........
மதம் ஏன் வேண்டும்?

மணக்கவும் பூவில் முகங்கள் பதிக்க
மதங்கள் தேவையில்லை.......
வானில் சுடரும் மீனை அளக்க
மதங்கள் தேவையில்லை.......

விடுதலை வானில் விரியும் சிறகில்......
மதங்களின் குறிகளில்லை...........
வீசும் காற்று மதங்கள் பார்த்து
நம்மைத் தொடுவதில்லை...

கரைகளில் நின்று அலைகளை நோக்கவும்
கவிதை வரியில் கடல்களைத் தேக்கவும்
தரையில் புல்லின் பசுமையை அணைக்கவும்
தூரிகை முனையில் திரும்ப நினைக்கவும்

மனந்தான் வேண்டும்
மதம் ஏன் வேண்டும்?

காலைக் கழுவிக் குடிக்கச் சொல்லும்
மதங்களின் ஆசாரம்!
கங்கையைக் கழிவுக் கூவமாய் மாற்றும்
மதங்களின் ஆசாரம்!
ஆயுதங்களுக்குப் பூசை நடத்தும்
மதங்களின் ஆசாரம்!
ஆனால் மனிதனைச் சாதியால் மிதிக்கும்
மதங்களின் ஆசாரம்!

நரகல் கண்டால் மிதியாமல் நடக்க
மதங்கள் தேவையில்லை...
நாறும் சகதியில் குளியாதிருக்க
மதங்கள் தேவையில்லை...

மணக்கும் பூவில் முகங்கள் பதிக்க
மதங்கள் தேவையில்லை...

மனிதரை மனிதர் அடையாளம் காண
மதங்கள் தேவையில்லை...
மனிதரை மனிதர் தோழமை கொள்ள
மதங்கள் தேவையில்லை...
மனிதரைப் பிரித்துச் சுவர்களை வளர்க்கும்
மதங்கள் தேவையில்லை...
மனித உறவை மனிதர்க்கு மறுக்கும்
மதங்கள் தேவையில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர்: தனரூபன் கிருஸ்ணன்
பிறந்த திகதி: 12.03.1974
பாடசாலை: ALBERT CAMPEELL C.I
வகுப்பு: OAC
தொலைபேசி: 416-412-3883
புனைபெயர்: முத்துச் செல்வம்

முத்து - தந்தையின் பெயர்
செல்வம் - தாயின் பெயர்

# எழுத்தாளர் அறிமுகம்

பச்சைப் பசேலெனும் வயல்வெளிகளின் ஆர்ப்பாட்டமும் என் வாழ்க்கையின் வெறுமையும் அந்த ஆலமர விழுதுகளும்.......... செவ்வரத்தைப் பூக்களின் நினைவுகளும்..... என் நினைவுகளை நெல்லியடி உதிரி கரவை கிராமத்திற்கு இழுத்துச் செல்கிறது.

என் அம்மாவின் முதல் முத்தத்தைப் போல...... அந்த நாட்களில் அனுபவித்த வறுமை... வெறுமை இவற்றையும் மறக்க முடியவில்லை. நான் தமிழைக் காதலிக்கத் தொடங்கியது நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில். அங்கு என் வெறுப்புகளுக்கு இலக்காகிய ஆசிரியர்களையும் மறக்க முடியவில்லை.

"வளமானவர் யாவரும் காட்டினிலே வெறும் வானரக் கூட்டங்கள் நாட்டினிலே" என்று கூறும் காலத்தில்தான் என் கிராமத்தின் பிரிவும் இங்கிலாந்தின் காலடி வைப்பும் கனடாவின் நிரந்தரமும்

வெறுமையான எனக்குப் புதிய சகாப்தம். ஆம் காதல்........ என் வெற்றிடங்கள் யாவும் நிரப்பப்பட்டு வெற்றுத்தாள்கள் சற்று உயிர்பெற தொடங்கின. என் கீதை என் தமிழ் நேசத்திற்கு தண்ணீர் ஊற்றினாள். அவள் என்னைவிட்டு பறந்துவிட்ட போதும் என் இதயத்திற்கு அவள் வாசம்தான் நிரந்தரம்.

அதனால் தானோ என்னவோ இன்றுவரைஎன் காவியங்கள் செத்துவிடவில்லை. தமிழையும் அவளையும் மறக்க மட்டும் தெரியவில்லை. நீண்ட நாட்களின் பின் கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் மூலம் அறிமுகம். இன்று ரோஜா மூலம் கௌரவிக்கப்படுகிறேன். இவை எல்லாம் என் முன்னால் குவித்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் கடமைகளையே உணர்த்தி நிற்பது, என்னை ஏற்பதும் மறுப்பதும் உங்கள் கைகளிலேயே.........

என் ஆக்கங்களுக்கு உயிர் கொடுத்த என் பெண்மணிக்கும் என்னை சார்ந்தவர்களுக்கும் நன்றிகள் நவில்கின்றேன்.

## என் சமர்ப்பணம்

அடிபெண்ணே சற்றுநில்....
உன் வதனங்கள்- என்ன
பூரணச்சந்திரனின் பிரதிபலிப்புகளா?
சரணமடைய துடிக்கும்- உன்
பிஞ்சுப்பாதங்கள்- என்
மனதில் மட்டும் எழுந்த
சரித்திர சஞ்சாரங்களா?
யார் அறிவார் உன்மனதை..........
நீ கொள்ளை கொண்டதோ பலரை-ஆனால்
உன்னை கொள்ளை கொண்டவன்- யாரோ
என் அகிலம் நீ மட்டும்தான்...........
எப்போதும் மாற்றமில்லை காவியம் அதை
புரிந்து கொள் என்னவளே..........
என்மனம் வெள்ளை
விரும்புவீயோ என் மன அழகை- இல்லை
மயங்குவீயோ புற அழகில்
இது உனக்கு சத்திய சமர்ப்பணம்
மட்டுமல்ல
உயிர்ச் சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் ஜப்பானிலுள்ள எனது நண்பருடன் "செஸ்" விளையாடிவிட்டு இப்போது தான் வந்தேன்."

"இந்தியாவிலுள்ள ஒரு நிறுவனத்திற்கு 15 நிமிடங்களுக்கு முன்னர் ஒரு தபால் அனுப்பினேன். அதற்கு அவர்கள் அனுப்பிய பதில் எனக்கு ஏற்கனவே கிடைத்து விட்டது."

"அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பற்றி இலங்கையிலுள்ள ஒருவரும், ஜப்பானிலுள்ள ஒருவரும் என்னுடன் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள்."

# இன்ரர் நெற்

இவையெல்லாம் 22ம் நூற்றாண்டின் விஞ்ஞான யுகத்தைப்பற்றிய ஒரு கதையில் இடம்பெறுபவை என எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? இல்லை. இவையெல்லாம் இப்போது உங்கள் கையின் முன்பே வந்துவிட்டன. "இன்ரர் நெற்" பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இன்ரர் நெற்றில் இதுவெல்லாம் சர்வசாதாரணம்.

*Canon* நிறுவனம் புதிதாக அறிமுகப் படுத்தியுள்ள கமராவைப் பற்றிய தகவல்கள் உங்களுக்கு தேவைப்படுகிறது என வைத்துக்கொள்வோம். அந்த நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அவர்களிடமிருந்து தபாலில் அந்த கமராவிற்கான *Catalog* ஐ பெறுவதற்கு உங்களுக்கு குறைந்தது 2,3 தினங்களாவது செல்லும். இன்ரர் நெற்

**கருணா**


மூலம் உடனடியாக வர்ணப்படங்கள் அடங்கிய *Catalog* ஒன்று உங்களுக்கு கிடைத்துவிடும். உங்களிடம் *Color Printer* ஒன்று இருப்பதாக வைத்துக் கொள்வோம். நீங்கள் காகிதப் பிரதியாகவே அந்த *Catalog* ஐ நிமிட நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். புதிய வகை *Honda Accord* கார் பற்றி தகவல் தேவை. அது எங்கே; எந்த வகையான விலையில் கிடைக்கிறது? எவ்வகையான *Mortgage Plane* இல் அது கிடைக்கிறது என்ற தகவல்கள் தேவை என்று வைத்துக் கொள்வோம். இது கூட இன்ரர் நெற் மூலம் சாத்தியம்.

இதை விட முக்கியமாக கொழும்பிலிருந்து வெளியாகும் *Daily News* பத்திரிகையை இங்கிருந்தபடியே நீங்கள் வாசிக்கலாம். இலங்கை நேரப்படி ஏறக்குறைய அதிகாலை 2,3 மணியளவில் அன்றய *Daily News* பத்திரிகையை, நீங்கள் இங்கிருந்த படியே வாசிக்கும்போது; அங்கு அது அச்சில் வெளிவந்திருக்காது.

# ஒரு நோக்கு..

அந்தப் பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரை தொடர்பாக நீங்கள் பதில் கடிதம் ஒன்று அனுப்ப விரும்புகிறீர்கள். அது கூட கணணியூடாகவே நீங்கள் செய்துகொள்ளலாம். என்வலப் தேடவேண்டியதேவையோ முத்திரை வாங்கும் செலவோ இனித் கிடையாது.

இரவு! வெளியே பனி கொட்டிக்கொண்டிருக்கிறது. *Boring*. நீங்கள் உங்கள் கணனியினூடாக, இன்ரர் நெற் மூலம் உலகின் ஏதாவது மூலையிலுள்ள யாருடனாவது கதைத்துக் கொள்ளலாம். புதிய பல தகவல்களைத் தெரிந்துகொள்ளலாம். அற்புதமாக இருக்கிறதா? இப்போது இன்ரர் நெற் என்றால் என்வென்று அறிந்து கொள்ள ஆவலாக இருப்பீர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறக்குறைய 30 வருடங்களுக்கு முன்னர் **RAND** என்ற அமெரிக்க நிறுவனம் இன்ரர் நெற் பற்றி சிந்தித்தது. இன்ரர் நெற் என்பது பல கணனிகளுக்கிடையேயான ஒரு வலையாக்கம் எனக்கொள்ளலாம். 1969 இல் முதலாவது Network ஆரம்பிக்கப் பட்டது. ஆரம்ப காலத்தில் இந்த வலை யாக்கமானது taxtஐ அடிப்படையாகக் கொண்ட; விஞ்ஞானிகளால் மட்டுமே விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் அமைந்திருந்தது. ஆணைத்தொடர்களின் கடினமான தன்மை பாரிய இடர்ப்பாடாக இருந்தது. இந்த முதலாவது வலையாக்கம் **"ARPANET"** என அழைக்கப்பட்டது. ஏறக்குறைய 90 களில் "இன்ரர் நெற்" ஆனது சாதாரண மனிதர்களின் பாவனைக்கு ஏற்ற முறையில் அமைந்தது.



"இன்ரர் நெற்" இல் முக்கியமான அம்சங்கள் சில. ஈ-மெயில் (E-mail or Electronic mail), யூஸ்நெற் (*Usenet*), **WWW** ஆகியவை. நீங்கள் இன்ரர் நெற் தொடர்பு ஒன்றை பெறும்போது உங்களுக்கு ***E-mail adress*** ஒன்றும் தரப்படும். இந்த முகவரி விளங்கிக் கொள்ள முடியாத வகையில் அமைந்திருக்கலாம். உதாரணமாக karuna@texmas.com. இப்போது உங்களுக்கு வேண்டிய கடிதம் ஒன்றை கணனியில் எழுதுங்கள். கடிதம் சேரவேண்டியவரின் ***E-mail*** முகவரியை பெற்றுக்கொள்ளுங்கள் (அவரிடம் இன்ரர் நெற் இருக்க வேண்டும்). கடிதத்தில் முகவரியை அதற்குரிய இடத்தில் எழுதிய பின் *Send* என்ற பட்டனை *Click* செய்யுங்கள். ஆயிற்று. இப்போது உங்கள் நண்பர் கணனியை பாவித்த வண்ணம் இருப்பாரேயானால் அவருக்கு கடிதம் கிடைத்திருக்கும். சில செக்கனில் எல்லாம் முடிந்து விட்டது. அவர் கணனியைப் பாவிக்காது இருந்தால்; அவருடைய தபால் பெட்டியில்(*Electronic mail box*) அது போடப்பட்டிருக்கும். அவர் மீண்டும் கணனியை பாவிக்க ஆரம்பிக்கும் போது தபால் ஒன்று வந்திருப்பதாக அறிவுறுத்தப்படுவார்.

தொலை நகலும் (*fax*) இதைத்தானே செய்கிறது என்று நீங்கள் கேட்கலாம் 50 பக்கங்கள் கொண்ட ஒரு கடிதத்தை அல்லது ஒரு ஆவணத்தை தொலை நகலில் அனுப்பப் போகிறீர்கள் என வைத்துக் கொள்வோம். முதலில்; வர்ணத்தில் உள்ள ஒரு படத்தை நீங்கள் அனுப்ப முடியாது. 50 பக்கங்களை தொலை நகலில் அனுப்ப ஏராளமான நேரம் எடுக்கும். நீங்கள் அனுப்புமிடம் தூரநாடு ஒன்று என வைத்துக் கொண்டால்; நீங்கள் ஏராளமான தொலைபேசிக் கட்டணத்தைச் செலுத்தவேண்டி நேரலாம். எழுத்துக்கள் துல்லியமாக இருக்காது. ஒரு வகை ***filmy paper*** இல் தொலைநகல் அங்கு கிடைக்கும். அந்த ஆவணத்தைப் பெற்றுக்கொண்டபின் அதில் உங்களால் திருத்தங்கள் செய்யமுடியாது.

*E-mail* இல் இதுவெல்லாம் சாத்தியம். 50 பக்கங்கங்களை நீங்கள் தயார் செய்துமுடித்ததும் அடுத்த கணமே அனுப்பிவிடலாம். சர்வதேச தொலைபேசிக் கட்டணங்கள் கிடையாது. எந்த செலவுமில்லை. (இன்ரர் நெற்றிற்கான மாதாந்தக் கட்டணம் தவிர) இங்கிலாந்திலுள்ள உங்கள் உறவினருக்கு தினசரி தபால் அனுப்பலாம். இனி செலவு கிடையாது. உங்களிடம் ஒரு ***Laser printer*** இருப்பின் துல்லியமாக அதை நீங்கள் பிரதியும் எடுக்கலாம். தேவையாயின் அதில் நீங்கள் திருத்தமும் செய்யலாம். அற்புதம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக WWW (World Wide Web). உதாரணமாக நீங்கள் இன்ரர் நெற் தொடர்பு ஒன்றை பெறும்போது "Netscape" அல்லது அதையொத்த மென்பொருளும் (software) உங்களுக்குக் கிடைக்கும்.உலகில் அநேகமான அரசுகள், நிறுவனங்கள், அமைப்புக்கள் என்பன தமக்கென ஒரு பகுதியை(web site) இங்குவைத்துள்ளன. இவற்றிற்கு தனித்தனியே முகவரிகள்(Internet address) உண்டு. உதாரணமாக இலங்கைக்கான இன்ரெர் நெற் நிறுவனத்தின் முகவரி http://www.lanka.net இப்போது நீங்கள் மென்பொருளில் சரியாக முகவரிப்படுத்தும் போது இலங்கைக்கான தொடர்பு உங்களுக்கு கிடைக்கும்.

சரி. உங்களுக்கு இந்த முகவரி சரியாகத் தெரியாது என்று வைத்துக் கொள்வோம். இப்போ என்ன செய்வது. உங்களுக்கு தேவையான முகவரிகளைக் கண்டுபிடிப்பதற்கு வழிகாட்டிகள் (search engins) உள்ளன. உதாரணமாக Yahoo, Webcrawler, Lycos என்பவை. http://www.yahoo.com என்ற முகவரியூடாக இந்த வழிகாட்டியை நீங்கள் அடையலாம். பின்னர் உங்களுக்கு தேவையான நிறுவனத்தின் பெயரை அல்லது அது தொடர்பான சில சொற்களை நீங்கள் கொடுக்கும் போது அந்த சொல் தொடர்பான சகல முகவரிகளையும் இந்த வழிகாட்டி தரும். உதாரணமாக "Newspaper" என்ற சொல்லைக் கொடுக்கும் போது; இன்ரர் நெற்றில் உள்ள சகல பத்திரிகைகளையும், அவை எந்த நாடுகளிலிருந்து வெளிவருகின்றன என்ற விபரத்துடன் இந்த வழிகாட்டி தரும். பின்னர் ஏதாவது ஒரு பத்திரிகையை நீங்கள் தெரிவு செய்யும் போது; நீங்கள் அந்த பத்திரிகையை வாசிக்கலாம்.

"USENET" இங்கு ஏராளமான தலையங்கங்களில் தொகுப்பக்கள் உண்டு. நீங்கள் தெரிவு செய்யும் ஒரு தலையங்கத்திற்கூடாக ஒரு குழுவிற்கு சென்று உங்கள் விடயங்களைப் பதிவு செய்யலாம். அல்லது பதிவு செய்யப் படுபவற்றை வாசிக்கலாம். இந்தப் பகுதியிலும் ஏராளமான தகவல்களை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.



இன்னோர் அற்புதம் "Chatting". இந்தப்பகுதியில் நீங்கள் உலகின் பல பகுதியிலுமுள்ள மக்களுடன் நேரிடையாக உரையாடும் வாய்ப்பினைப் பெறுகிறீர்கள். இங்கு வயது வாரியாக, நாடு வாரியாக இன்னும் பல வகைகளில் அறைகளுண்டு(Chating rooms). இந்தவகை கணனியியல் அறைகளுக்கு செல்லும்போது அந்த அறைகளில் ஏற்கனவே உள்ளவர்களுடன் நீங்கள் நேரடியாக உரையாடலாம். எப்படி உரையாடுவது? நீங்கள்"Hello! How are you?" என்று Type பண்ணும்போது, ஏனைய சகலருக்கும் (அந்த அறையில் உள்ளோர்) தமது கணனித் திரையில் அந்தத் தகவல் கிடைக்கும். நீங்கள் புகைப்படக் கலையில் ஆர்வமுள்ளவர் என்று வைத்துக்கொள்வோம். Chatting மூலம் புகைப்பட நிபுணர்களிடம் நேரிடையாகவே பல சந்தேகங்களைக் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம். வெளிநாடு ஒன்றிலுள்ள ஒரு உறவினரை குறிப்பிட்ட ஒரு அறைக்கு வரும்படி அழைத்தபின் இருவரும் நேரிடையாகவே உரையாடிக் கொள்ளலாம். ஏராளமான தொலைபேசிக் கட்டணத்தைச் சேமிக்கலாம். மிகுந்த சுவாரசியமான பகுதி. பலர் இப்போது இந்தப்பகுதியில்தான் தங்கள் வாழ்க்கைத் துணையையே அமைத்துக் கொள்கிறார்களாம்.

சரி இனி எப்படி இந்த "இன்ரர் நெற்" தொடர்பை பெற்றுக் கொள்ளலாம். நிச்சயமாக உங்களுக்கு ஒரு கணனி தேவை. இன்றுள்ள அனேகமான வகைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




SRI SIVA
JEWELLERY

721 Bloor St. W., Toronto, ON.
Tel: (416) 531-4867



வீடியோ மாருதி
**VIDEO MARUTY** INC

சகலவித மங்களகரமான
வைபவங்களையும் நவீன முறையில்
3 CCD மூலம் வீடியோவில்
பதிவு செய்து தரப்படும்.

ரொறன்ரோ
கிருபா *(416) 751-8143*

மொன்றியல்
*(514) 989-5021* இன்பன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


YARLTON MARKET

9 CLINTWOOD GATE #4 & 5A
On Victoria Park Ave

Photocopying
& Fax Services

Tel/Fax: (416) 445-5352
Tel: (416) 445-5763

Lotto 649, TTC டிக்கற், முத்திரை, Metro Pass
இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள்
பால், பழம், மரக்கறி வகைகள்,
உடன் இறைச்சி, கடலுணவு வகைகளுக்கு



யாழ்ரன் மார்க்கற்

புன்னகை பொன்னகையைவிடச் சிறந்ததல்லவா.... உங்கள் பற்களை பாதுகாருங்கள்!

ஸ்காபுரோ பல் வைத்திய நிலையம்

டாக்டர் ஆதி கணபதி சோமசுந்தரம்
Dr. G.A. Pickersgill, Orthodontist

திங்கள்-சனி காலை 9.00 - மாலை 9.00 மணிவரை, ஞாயிறு அனுமதிப்பவர்கள் மட்டும்!

2155 Lawrence Av.E., Suit 10, (at Birchmount) Tel: 416-750-9969

ரொறன்ரோவில் முதன் முதலில் தமிழர் மத்தியில் புடவை
வியாபாரத்தை ஆரம்பித்து வைத்த முன்னோடிகள்

6 Kumars
SILK HOUSE

1394 Gerrard St. E., Toronto, ON Tel/Fax: 416-465-7131



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணனிகள் இன்ரர் நெற் தொடர்பிற்கு இயங்கவல்லவை. ஒரு *14400 bps* அல்லது அதைவிட வலுவான *Modem* ஒன்றும் தேவை. இவையெல்லாம் உங்களிடம் இருப்பின் நீங்கள் இன்ரர் நெற் இணைப்பை சாதாரண தொலைபேசி இணைப்பினூடு பெற்றுக்கொள்ளலாம். இன்ரர் நெற் தொடர்பைத் தரும் பல நிறுவனங்கள் இங்கு உள்ளன. இதற்கான கட்டணம் மாதத்திற்கு *$9.00* இலிருந்து *$40.00* வரை இருக்கலாம். இணைப்புக் கிடைத்தவுடன் நீங்கள் தயார். இந்த நூற்றாண்டில்; தகவல் பரிவர்த்தனையில் ஏற்பட்ட பாரிய அதிசயத்தை நீங்களும் பாவித்துப் பாருங்களேன்.

பலருக்கு ஒரு சந்தேகம். இன்ரர் நெற் மூலம் உங்கள் கணனிக்கு வைரஸ் தொற்றுமா? (அதுசரி! அது என்ன வைரஸ் என்று கேட்டுவிடாதீர்கள். கணனியில் வைரஸ் என்ற மென்பொருள் மிகப்பிரபலம். இது தொற்றினால் உங்கள் கணனிக்கு சளி, தடிமன் ஏற்படலாம். சிலசமயங்களில் பைத்தியமே பிடிக்கலாம்) நிச்சயமாக இல்லை. வைரஸ் தொற்றாது. நீங்கள் ஏதாவது ஒரு *(File)* கோப்பை *Download* செய்யும்போது சாத்தியமுண்டு. சாதரணமாக நீங்கள் உபயோகிக்கும்போது இன்ரர் நெற் மூலம் வைரஸ் தொற்று ஏற்படாது.

வெளிநாடு ஒன்றிற்கு *E-mail* அனுப்பும்போது அல்லது www வினூடாக தொடர்புகொள்ளும் போது சர்வதேசத் தொலைபேசிக்கட்டணங்கள் கிடையாது. வேறு யாராவது உங்கள் கணனியில் உள்ள தகவல்களைப் பார்க்க முடியுமா? முடியாது. உங்களுக்கு வந்துள்ள தபாலையும் யாரும் பார்க்க முடியாது.

ஆகமொத்தத்தில் இன்ரர் நெற் மூலம் உலகம் மிகவும் சுருங்கிவிட்டது. சிலகண நேரத்தில் உங்களுக்குத் தேவையான தகவல்கள் யாவற்றையும் பெற்றுக்கொள்ளலாம். சில வானொலிகள் கூட இன்ரர் நெற் மூலம் ஒலிபரப்புச் செய்கின்றன. தெளிவான ஒலியில் நீங்கள் இந்த நிகழ்ச்சிகளைக் கேட்கலாம். திரைப்படங்களிலான முக்கிய சில காட்சிகளையும் பார்க்க முடியும். (உங்கள் *VCR* இல் பார்ப்பது போன்று). விரைவில் இன்ரர் நெற் மூலம் திரைப்படங்களையும் பார்க்க முடியும். இன்னும் பல இன்ரர் நெற்றில் விரைவில் வரவுள்ளன. சுவாரசியமான இந்த இன்ரர் நெற்றில் நீங்களும் இணைந்து கொள்ளலாமே.

★★★★★






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சா. கந்தசாமி எழுதும்...

# தகவல்காரர்

1

பெருக்க வந்தவள் மின்விசிறியை நிறுத்த, பகல் கனவில் படியேறிப்போன கணவன் விழித்துக் கொள்ள, காபி கொடுத்து, காய் நறுக்கி, காலையில் சுட்டடுக்கத் தோசை கரைத்து, முகம் கழுவி, கூடத்தில் விளையாடும் பிள்ளைகள் குறும்படக்கி, எழுதிவந்த கணக்கெல்லாம் சரியாகப் போடவைத்து, மேலே கொடியில் உலர்ந்த துணியும், விரிப்பில் வடகமும் சுருட்டி வந்து, ஆன்டென்னா சரியாக்கி, அவசர-மான சமையல் செய்து, டிவி படம் முடிய, சாப்பாட்டுக் கடை ஓய, பாத்திரம் ஒழித்துப் போட்டு, பசங்களைப் படுக்கையில் விட்டு, மேயப் பாக்கி இல்லா காலைப் பேப்பரோடு காத்திருக்கும் கணவன் கண்காட்ட, 'வரேன்' என்று தலையசைத்து, வாசல் கதவடைத்து, கூடத்து விளக்கணைத்து, ஜன்னலண்டை போனவள் வாயில் வெற்றிலையோடு வானம் பார்த்தாள். "பெய்" என்றாள்.

2

மழை கொஞ்சம் விட்டால் கிளம்பி விடலாம் என்று பார்த்தார் ரங்கநாதன். கையில் ஒரு குடை இருந்தால் நன்றாக இருந்திருக்கும். பத்திரிகை ஆபீசை மூடிய பொழுது, குடையை அங்கேயே விட்டு விட்டு வந்ததாக நினைவு.

அது பத்து வருஷத்துக்கு முன்னால். அப்போது எழுபது குடும்பங்கள் இருந்தன. சுற்றிப்பற்றி நூறுமைல் தூரத்துக்குள் இருந்த குடும்பங்கள். அவர்களுக்கென்று தனியாக ஒரு மதம், கலாசாரம், மொழிகூட தனியாக இருந்ததாம். பேச்சு வழக்கு ஒழிந்து போய் இருநூறு வருஷம் ஆகிறதாம். இருநூறு வருஷம் அதற்கும் முன்னால் தூரதேசத்திலிருந்து கப்பலில் வந்து இங்கே குடியேறியவர்கள். எழுபது குடும்பத்துக்காக ஒரு பத்திரிகை. ரங்கநாதன் தான் ஆசிரியர்.

ரங்கநாதனின் வாழ்க்கையே இப்படி இன ஜாதிப் பத்திரிகைகளில்தான் ஆரம்பித்திருக்கிறது. ஐநூறு காப்பி. எல்லாவற்றிலும் கையால் திருத்திய எழுத்துப் பிழைகள். சந்தாவைக் கட்டச் சொல்லி கட்டம் போட்டு வேண்டுகோள். பரமபதமடைந்தார் இயற்கை எய்தினார். பூப்பு நீராட்டுவிழா, மாநா டுகல்யாணப் புகைப்படம், சங்கத் தேர்தல், சண்டை போட்டிப் பத்திரிகை. "கட்டி வரலை....மூடிடலாம்னு பாக்கிறோம்......" இன்னொரு இனம். இன்னொரு பத்திரிகை. ஐநூறு காப்பி.



மழை விட்டபடியாக இல்லை. இன்றைக்கு ஆரம்பிக்கா விட்டால் இழுத்துக் கொண்டு போகும். போன மாதமே பணம் கொடுத்து விட்டார்கள். பத்து வருஷமாகத் தவறாமல் பணம் வந்து கொண்டிருக்கிறது.

"பத்திரிகை நின்று விட்டால் பரவாயில்லை. உங்களுக்கும் வயதாகிறது, எங்களுக்கும் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருநூறு குடும்பம் இருந்த இடத்தில் இப்போது எழுபது குடும்பம் தான். நூறு காப்பி மட்டும் அடித்தாலும், படிக்க ஆளில்லை. பலர் குடும்பம் குடும்பமாக மூதாதையர் நாட்டுக்குப் போய்க் குடியேறி இரண்டு தலைமுறையாகிறது. இன்னும் சிலபேர் இங்கேயே ஜனக் கூட்டத்தோடு கலந்து அடையாளம் இழந்து போனார்கள். மிஞ்சிய நாங்கள் எல்லோரும் முதியவர்கள். எழுபது வீட்டிலும் நாங்கள் மட்டும் தான் இருக்கிறோம். நாளை எண்ணிக் கொண்டிருக்கிறோம்.



கண்பார்வை வேறு சரியாக இல்லை. ஒன்றும் படிக்க முடியவில்லை. ரங்கநாதன் ஆகிய நீர் ஒரு காரியம் செய்ய வேண்டும். மாதம் ஒரு முறை எழுபது வீட்டுக்கும் போய் வாரும். நடப்புக்களை, முக்கியமாகச் சாவு விபரங்களை அங்கங்கே சொல்லிப்போம். உம் பெயரில் மாதாமாதம் மணியார்டர் வர ஏற்பாடு செய்திருக்கிறது. நாங்கள் யாருமே இல்லாமல் போனாலும், நீர் இருக்கும் வரை பணம் வரும். எழுபது விலாசங்கள் இந்தாரும்...... முதல் விலாசம் என்னுடையது"

சுருட்டுப் புகையோடு விலாசம் கொடுத்தவர் அடுத்த மாதம் இறந்த முதல் செய்தியைத்தான் ரங்கநாதன் கொண்டு போனார். எல்லா வீடுகளிலேயும் ஈஸிசேர்கள் இருக்கின்றன. முதியவர்கள் மூட்டுப் பிடிப்பு மருந்து, பழைய புகைப்படங்கள், கால் ஆடுகிற மர நாற்காலிகள் வெந்நீர்ப் பாத்திரம். ரங்கநாதனை வரவேற்று வெந்நீர் தருகிறார்கள். ஒவ்வொரு சாவுச் செய்தியையும் நம்ப முடியாத வியப்போடு கேட்கிறார்கள். மவுனமாக இருக்கிறார்கள். கண்ணீர் விடுகிறார்கள். அடுத்த மாதச் செய்தியில் தாங்களும் வரக் கூடும் என்று தெரிவித்துக் கொள்கிறார்கள். கிளம்பும் போது மெல்ல வாசல் வரை கூட வருகிறார்கள். இருமுகிறார்கள்.

பெருமூச்சோடு கதவை அடைத்து உள்ளே போகிறார்கள்.

மழை நின்று விட்டது.

ரங்கநாதன் தன் சிவப்பு டைரியை எடுத்து கைப்பையில் வைத்துக் கொண்டார். எல்லா விலாசமும், போய்ப் பார்த்த விபரமும் அதில் இருக்கிறது. அப்புறம் நோட்புக். வரிசையாகச் சாவுச் செய்திகள். ஒவ்வொரு மாதமும் நாலாவது குறைந்தது புதியதாக வருகிறது. எண்ணிக்கை குறைகிறபோது பழைய செய்திகளை வாசிக்கச் சொல்லிப் பிரத்தியேகமாக கேட்டுக் கொள்கிறார்கள்.

துண்டு, ஆலங்குச்சி, வேட்டி, பேனா, மூக்குக் கண்ணாடி, ரொட்டி, பணம், பையில் இன்னும் இடம் இருக்கிறது. கிளம்ப வேண்டியதுதான்.

~ தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AUTO MECHANIC SHOP

*உங்களின் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் எம்மை நாடுங்கள். உங்கள் மனநிறைவுக்கு நாங்கள் உத்தரவாதம்.*



***IRIE*** *CA SERVICES*

**86 MELFORD DR, UNIT.14,**
**SCARBOROUGH, ONT.**


- *Tune-up*
- *Brakes*
- *Transmission & Engines rebuilt*
- *Air-Condition*
- *Body Work*

Domestic, European & Japanese car & Vans.

We are specialized in **HONDA**

**தொடர்புகளுக்கு:-**

S. Ruban
**(416) 299-0452**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பூங்கா

## விவேகானந்தர்

கல்கத்தாவில் உள்ள உயர் நீதி மன்றத்தில் வழக்கறிஞராக இருந்தார் விஸ்வநாததத்தர். அவரது மனைவி புவனேஸ்வரிதேவி தனக்கு ஓர் ஆண் குழந்தை வேண்டுமென்று சிவபெருமானை பிரார்த்தித்து பூஜை செய்தாள். அவளது பிரார்த்தனையையும் பூஜையையும் கண்டு சிவபெருமான் ஆச்சரியப்பட்டார்.
புவனேஸ்வரிதேவிக்கு 1863ம் ஆண்டு ஜனவரி 12ம் திகதி ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு சிவபெருமானின் பெயர்களில் ஒன்றான வீரேஸ்வரன் என்ற பெயரைச் சூட்டினார்கள். சில சமயங்களில் நரேந்திரன் என்றும் அழைப்பார்கள். நரேன் சாதாரண குழந்தை அல்ல. அவன் தெய்வப் பிறவி. எப்படி அவன் பிறவி என்று விளக்கத்தான் இந்தக் கதை.



சப்தரிஷி மண்டலம் என்ற ஓர் இடத்தில் ஏழு பெரிய ரிஷிகள் தவம் செய்து கொண்டிருப்பதாக நமது சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. ஒருநாள் வழக்கம்போல் அந்த ஏழு ரிஷிகளும் அந்த இடத்தில் தவம் செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது அங்கிருந்த ஒரு ரிஷியின் மடியில் ஒரு குழந்தை வந்து அமர்ந்தது. உடனே அந்த

**தட்சனா பிரேமச்சந்திரன்**

ரிஷி கண்திறந்து பார்த்தார், அந்தக் குழந்தை அவரிடம் நான் பூமிக்குப் போகிறேன் நீங்களும் வருவீர்களா என்று கேட்டது. ரிஷியும் ஆம் என்ற விதத்தில் புன்னகை புரிந்தார். அந்த ரிஷிதான் புவனேஸ்வரிதேவியின் குழந்தையாகப் பிறந்தார். ரிஷியின் மடியில் இருந்த குழந்தை ஸ்ரீராமகிருஷ்ணராக அவதரித்தார்.
நரேந்திரனுக்கு தியானம் செய்வது மிகவும் பிடித்தமான விளையாட்டாக இருந்தது. சில சமயங்களில் அவன் தன்னை மறந்து தியானத்தில் ஆழ்ந்திருப்பான். சில சமயங்களில் நரேந்திரன் குறும்பு செய்வதுண்டு. அதற்குப் புவனேஸ்வரிதேவி ஒரு வழி கண்டுபிடித்தார். அதாவது அவனை குழாயடியில் இருத்தி சிவ, சிவா! என்று தண்ணீரைக் கொட்டுவாள். உடனே நரேன் தனது விஷமத்தனங்களையெல்லாம் விட்டு விடுவான். சின்ன வயதிலிருந்தே நரேன் விசித்திரமாக உறங்குவதுண்டு. அவன் உறங்கப்போகுமுன் அவனது புருவ மத்தியில் ஒரு ஒளிப்பிழம்பு தோன்றும். அந்த ஒளி சிறிது சிறிதாகப் பெரிதாகிக் கொண்டே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும். அந்த ஒளி பல நிறங்களோடு வரும். பிறகு அந்த ஒளி வெடித்து ஒளித்துகள்கள் அவனை மூடிக் கொள்ளும். நரேந்தரனுக்கு வேறொரு விசித்திரமான அனுபவமும் இருந்தது.

அதாவது அவன் ஒவ்வொரு நாளும் உறங்கச் செல்லும் பொழுது அவனுக்கு இரண்டுவிதமான எண்ணங்கள் தோன்றும். ஒன்று ஏராளமான செல்வத்துடனும், வேலையாட்கள் வேலை செய்ய தான் அரசனாக சுகமாக இருப்பது. மற்றொன்று- ஒரு சந்நியாசியாக இருந்து கடவுளுக்காகவே வாழ்வது. அவன் துறவி வாழ்க்கையையே விரும்பினான்.

ஒருநாள் அவன் மனதில் கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரா? என்ற கேள்வி எழுந்தது. அதனால் அவன் காண்பவர் எல்லோரையும் நீங்கள் கடவுளைப் பார்த்திருக்கிறீர்களா? என்று கேட்பான். உடனே எல்லோரும் இல்லை என்பார்கள்.

ஒருநாள் அவன் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றி கேள்விப்பட்டான். அவரைக் காண தட்சிணேஸ்வரத்திற்குச் சென்றான். அங்கும் அவன் தனது வழக்கமான கேள்வியை கேட்டான். "ஐயா! நீங்கள் கடவுளைப் பார்த்திருக்கிறீர்களா? என்றான். உடனே ஸ்ரீராமகிருஷ்ணரும் "ஆம் குழந்தாய் நான் கடவுளைப் பார்த்திருக்கிறேன். உனக்கும் நான் கடவுளைக் காட்டுகிறேன் என்றார். நதேரந்திரன் ஸ்ரீராமகிருஷ்ணரையே தன் குருவாக ஏற்றுக் கொண்டான். இந்த நிலையில் நரேந்திரனின் தந்தை காலமானார். 1886ம் ஆண்டு ஆகஸ்ட் பதின்நான்காம் தேதி ஸ்ரீராமகிருஷ்ணர் கடும் நோய்வாய்பட்டு படுத்த படுக்கையில் இருந்தார். ஒருநாள் ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரனை அழைத்து "எவன் ராமனாகவும் கிருஷ்ணராகவும் இருந்தாரோ அவர்தான் இப்பொழுது ஸ்ரீராமகிருஷ்ணராக இந்த உடலில் இருக்கிறேன். இது நடந்த இரண்டாம் நாள் ஸ்ரீராமகிருஷ்ணர் மறைந்தார். ஸ்ரீராமகிருஷ்ணரின் சீடர்கள் அனைவரும் அவரது அஸத்தியை பாரதநகர் என்ற இடத்தில் வைத்து வழிபட்டு வந்தனர்.

இந்த நேரத்தில் நரேந்திரனுக்கு சுவாமி விவேகானந்தர் என்ற பெயர் சூட்டப்பட்டது. இந்த நேரத்தில் சுவாமி விவேகானந்தருக்கு ஓர் எண்ணம் தோன்றியது அதாவது அவர் இந்தியாவின் சுற்றுப்புறத்தை பார்க்க விரும்பினார். அவர் கால் நடையாகப் புறப்பட்டார். கடைசியில் கன்னியாகுமாரிக்குச் சென்றார். அங்கு அவர் கடற்கரையில் வந்து பார்த்தார். அங்கு கடலின் நடுவில் அவர் ஒரு பாறையைக் கண்டார்.

அந்த பாறைக்கு நீந்திச் சென்றார். அங்கு அவர் மூன்றுநாள் தியானத்திலிருந்தார். அப்போது அவர் சிந்தனையில் இந்தியாவின் காட்சி தோன்றியது. அந்தக் காட்சியில் இந்தியாவின் நிலை எதிர்மாறாகத்

> *அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்*
> *மனிதனின் முதலாவதாக அறியும் தெய்வம் தாய்! அதற்கடுத்த தெய்வம் தந்தை.*
> *- ஔவையார்*
> *கொன்றை வேந்தன்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்பட்டது. அவர் அந்த நிலையை மாற்றியாக வேண்டுமென்ற எண்ணத்தில் கரை சேர்ந்தார். அதன் பிறகு சென்னையை வந்தடைந்தார். அவரைக் கண்ட சிலர் அவரது சீடர்கள் ஆனார்கள்.

இந்த நேரத்தில் அமெரிக்காவில் சிகாகோ என்ற இடத்தில், எல்லா மதங்களின் சர்வசமயப் பேரவை ஒன்று நடை பெற இருந்தது. சுவாமி விவேகானந்தரின் சீடர்கள் "நீங்கள் இந்து மதத்தின் சார்பாக சர்வசமயப் பேரவையில் கலந்து கொள்ளுங்கள்" என்று கேட்டார்கள். அதற்கு சுமாமி விவேகானந்தர் முதலில் சம்மதிக்கவில்லை. பின்பு அவர் சம்மதித்து அமெரிக்காவிற்குச் சென்றார். அங்கு சர்வசமயப் பேரவையில் கலந்து கெஜாண்டார்.

அங்கு அவர் பேசும் நேரம் வந்தது. அவர் எழுந்து நின்று "அமெரிக்கா சகோதர சகோதரிகளே!" என்றார். உடனே அமெரிக்க மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். பிறகு அவர் தனது சொற்பொழிவைத் தொடர்ந்து பேசினார். மறுநாள் அமெரிக்க பத்திரிகைகளிளெல்லாம் விவேகானந்தரின் படங்களும் சொற்பொழிவுகளெல்லாம் இருந்தன. இந்தியாவிற்கு விவேகானந்தர் திரும்பினரார். அங்கிருந்து அவர் கல்கத்தா சென்று "ராமகிருஷ்ண மிஷன் என்ற இயக்கத்தை தொடக்கி வைத்தார். 1902, ஜுலை 4 ஆம் திகதி சுவாமி விவேகானந்தர் மகா சமாதியடைந்தார்.

அவரது அமெரிக்காவில் ஆரம்பித்து வைத்த வேதாந்த சங்கங்கள் தொடர்ந்து சேவையாற்றி வருகிறது.

ரோஜா.

## நம்பிக்கை நற்சத்திரம்

*நான் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் பிறந்தேன். எனக்கு இலங்கை விருப்பம். நான் தற்பொழுது கனடாவில் வசிக்கிறேன். நான் போலின் பாடசாலையில் இங்கிலிசும், தமிழிலும் பாடங்கள் படிக்கிறேன். இலங்கையில் சினோ, குளிர் இல்லை கனடாவில் குளிர் கூட. நான் பிறந்த நாடு- மிகவும் பற்று எனக்கு குளிரும் இல்லை வெப்பமும் இல்லை. இங்கு பல நாட்டுப் பிள்ளைகள் என்னுடன் படிக்கிறார்கள். பழகுவதற்கு இனியவர்கள். கனடா ஒரு அழகான நாடு. பிள்ளைகளாகிய நாங்கள் படிப்பதற்குப் பல வசதிகள் உள்ள நாடு. வாழ்க கனடா, வாழ்க இலங்கை.*

*ஜனனி-ஜெ*
*போலின் பாடசாலை*
*ரொறன்டோ*
*1ஆம் வகுப்பு*
*ஆசிரியை: சறோஜா ஜெகநாதன்*

## அறிவித்தல்

**மாணவர் போட்டியின் முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது!**

**புதிய முடிவுத் திகதி ஜுன் 1, 1996**

## மலர்ந்த ரோஜா..... - பேசும் ஆசிரியரின் பேனா!.......

# எம்மதமானாலென்ன?
# நாம் தமிழர்கள்

இனவெறி கொண்ட ஸ்ரீலங்கா அரசாங்கம் மதங்களின் பிரிவினையை வெளிநாடுகளுக்கு எடுத்துக்காட்டி (தமிழர்களை இந்துக்கள் எனவும் சிங்களவர்களைப் பௌத்தர்கள் எனவும்) சில வெளிநாடுகளிடம் ஆயுதங்களைப் பெற்றதும் பெறமுனைந்ததும் தமிழர்கள் நாம் அறிவோம். காலப்போக்கில் அதில் வெற்றி காணாத அரசாங்கம்.....

இன்று எமது தேசிய விடுதலை இயக்கத்தின்மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, எமது இயக்கத்தின் செயற்பாடுகளை வெளிநாடுகளில் கட்டுப்படுத்துவதற்கும், எமது வெளிநாட்டு அலுவலகங்களை மூடச் செய்வதற்கும் பகிரதப் பிரயத்தனம் செய்து வருகிறது. ஸ்ரீலங்கா அரசின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இதற்கான முழு மூச்சுடன் செயற்பட்டு வருகிறார். எனவே இந்த பொய்பிரச்சாரங்களை முறியடிக்கும் நோக்குடன் உண்மைநிலையை விளங்கிய தமிழீழ மக்களும் எமது தமிழர் அமைப்புக்களும் பிரச்சார நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்று தமிழீழ தேசிய விடுதலை இயக்கம் அறிவித்திருந்ததை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஸ்ரீலங்கா அரசினால் சுமத்தப்பட்டிருக்கும் போதைவஸ்து கடத்தல், பயமுறுத்திக் காசு பறித்தல், சர்வதேச பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்பு, கடவுச்சீட்டு மோசடி/ ஆட்களைக் கடத்தல் போன்ற குற்றச்சாட்டுக்களில் எமது தேசிய விடுதலை இயக்கம் சம்பந்தப்படவில்லை என்பதை நாம் வாழும் நாடுகளின் அரசாங்கங்களுக்கு எடுத்துக் கூறுவது தமிழர்களின் முக்கிய கடமையாகும்.

இதேவேளை தமிழினத்தின்மீது திணிக்கப்பட்டிருக்கும் இனவெறிப் படுகொலை, பொருளாதாரத்தடை, திட்டமிட்ட கல்வி பாழடிப்பு, தடுக்கப்படும் புனர்வாழ்வு நடவடிக்கை, கடல்வலயத் தடைச்சட்டம், விவசாய உள்ளீடுகள், உரம், கிரிமிநாசினி போன்றவற்றிற்கான தடை, இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசத்திற்குள் சிக்கியுள்ள தமிழர்களின் நிலை, தமிழர்படும் கஷ்டங்களை வெளியுலகிற்கு இருட்டடிப்புச் செய்யும் செய்திகள் போன்றவற்றை நாம் வாழும் அரசாங்கங்களுக்கு எடுத்துக் காட்டுவதும் இன்றைய கட்டாயமாகும்.

ஈழத்தமிழர் நாம் ஒற்றுமையோடு உணர்வுக் கரங்களை உயர்த்துவோம்!

வி. எல். ஆனந்த்

இலக்கியம் வளர்ப்போம் இலட்சியமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய மாத மலர்
ரோஜா
மலர்.3 இதழ்.11
மார்ச் 15, 96 - ஏப்ரல் 14, 96

பிரதம ஆசிரியர்:
***வி.எல். ஆனந்த்.***

உதவி ஆசிரியர்கள்:
***அனுசியா ஆனந்த்.***
***எஸ். ராஜ்மோகன்.***

சிறப்பாசிரியர்:
***சிவா சின்னத்தம்பி***

பிரசுரம்/விளம்பரம்/வடிவமைப்பு/
அச்சமைப்பு/அச்சடிப்பு:
***எஸ். கிரிஷோத் ரைப்செட்டிங்***

விநியோகம்/விளம்பர உதவி:
***ஜேசு***

அட்டை வடிவமைப்பு:
***சசி - கரன் கிராப்***

அச்சடிப்பு உதவி::
***பரடைஸ் அச்சகம்***

படப்பிடிப்பு/ஓவியம்/அச்சமைப்பு உதவி:
***கருணா - கிரிஜேட்வ் போட்டோ***

# வாசகரின் பேனா...

அன்புடன் ஆசிரியருக்கு,

சென்ற "ரோஜா" இதழ் கண்டு மகிழ்ந்தேன். முக்கியமாக எல்லைக்கோடு சிறுகதை, ராசுக்குட்டி அப்பா, கவிதை, பற்று சிறுவர் கதை எல்லாம் தரமாகவும், விரும்பத்தக்க தாகவும் இருந்தன.

புதியதோர் உலகம் எம்மை 24 மணிநேர வானொலி நிலையத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டது. இதனை எழுதிய ஜெகதீசனுக்கு பாராட்டுக்கள். இதற்கு பிறகுதான் நாம் வானொலிப் பெட்டியொன்றை 'கொழும்பு பூட்'இல் வாங்கினோம். வாங்கிய அன்றே கவலைப்பட்டோம். இந்த தரமான நிகழ்ச்சிகளை இவ்வளவு நாளும் தவறவிட்டோமே என்று!

சிறுவர் ஆக்கங்களுக்கு கூடிய முக்கியத்துவம் கொடுப்பது நல்லது. சினிமா தவிர்ப்பது நல்லது என்பது எனது கருத்து. "ரோஜா" இதழை மாதாமாதம் தவறாவல் வெளிகொண்டு வாருங்கள். எமது ஆதரவு என்றும் உங்களுக்கு இருக்கும் என்று கூறிமுடிக்கின்றேன்.

இப்படிக்கு
அன்பின் வாசர்களின் ஒருத்தி
**பிரேமா**
ஸ்காபரோ
(மார்க்கம் & எல்ஸ்மேயர்)

**ஆக்கங்கள் விளம்பரங்கள்**
தொலைபேசி: (416) 425 2884, தொலைநகல்: (416) 425 2625
**"ROJAH"**
F.P.P.O., P.O.BOX 45593, 747 DON MILLS RD,
DON MILLS, ON. CANADA, M3C 3S4.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞாயிறு காலை

6.00 கீதாஞ்சலி
6.45 செய்தியரங்கம்
7.00 நம்நாட்டுப்பாடல்கள்
7.15 பிறந்தநாள் வாழ்த்துக்கள்
7.30 பொங்கும் பூபாளம்
7.45 செய்தியரங்கம்
8.00 பொங்கும் பூபாளம்
8.30 இவ்வார நேயர் *
8.45 செய்தியரங்கம்
9.00 கதம்பம்
10.00 கலந்துரையாடல் *
11.00 புது வாழ்வு
12.00 தமிழோசை *
13.30 சந்திப்பு *
14.00 தொடர்ந்தும் பல்சுவை நிகழ்ச்சிகளை நேயர்கள் கேட்கலாம்.

Asian Fine Arts
CTBC
கனடிய
தமிழ்
ஒலிபரப்புக்
கூட்டுத்தாபன
பல்சுவை நிகழ்சிகள்

## திங்கள் காலை

6.00 கீதாஞ்சலி
6.45 செய்தியரங்கம்
7.00 நம்நாட்டுப்பாடல்கள்
7.15 பிறந்தநாள் வாழ்த்துக்கள்
7.30 பொங்கும் பூபாளம்
7.45 செய்தியரங்கம்
8.00 பொங்கும் பூபாளம்
8.15 ராகமும் கானமும் *
8.45 செய்தியரங்கம்
9.00 இவ்வார விருந்து
9.45 ஒலிப்பாளர் விருப்பம்
10.00 கலந்துரையாடல் *
1100 தமிழோசை *
12.00 தொடர்ந்தும் பல்சுவை நிகழ்ச்சிகளை நேயர்கள் கேட்கலாம்.

* - மறு ஒலிபரப்புகள்

## ஞாயிறு மாலை

5.00 தலைப்புச் செய்திகள்
5.15 இவ்வார விருந்து
6.00 தமிழோசை
7.00 கனடிய உலகச் செய்திகள்
7.15 பிறந்தநாள் வாழ்த்துக்கள்
7.30 ராகமும் கானமும்
8.00 தமிழ்மூலம் உரையாடல்
8.30 BBC தமிழோசை +/ நினைவில் நிற்பவை
9.00 நாடகம் ★
9.30 செய்தியரங்கம்
10.00 கலந்துரையாடல்
11.00 தொடர்ந்தும் பல்சுவை நிகழ்ச்சிகளை நேயர்கள் கேட்கலாம்.

+/ - BBC தமிழோசை ஒலிபரப்பு ஆரம்பமாகும்வரை நினைவில் நிற்பவை.

"தமிழ்மூலம் உரையாடல்"

"கேள்வியும் நீங்கள் பதிலும் நீங்கள்"

"கலந்துரையாடல்"

அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கம்

**416-429-5290**

## திங்கள் மாலை

5.00 தலைப்புச் செய்திகள்
5.15 இசைமாலை
6.00 பலதும் பத்தும்
7.00 கனடிய உலகச் செய்திகள்
7.15 பிறந்தநாள் வாழ்த்துக்கள்
7.30 விமர்சகர் விருப்பம்
8.00 இசையமுதம் ★
8.30 BBC தமிழோசை +/ நினைவில் நிற்பவை
9.00 கவிதையும் கானமும்
9.30 செய்தியரங்கம்
10.00 தேன்கிண்ணம்
11.00 தொடர்ந்தும் பல்சுவை நிகழ்ச்சிகளை நேயர்கள் கேட்கலாம்.

★ - நிகழ்ச்சி முன்னோட்டத்தில் மேலதிக விபரங்களை நேயர்கள் கேட்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவ்வாய் காலை

6.00 கீதாஞ்சலி
6.45 செய்தியரங்கம்
7.00 நம்நாட்டுப்பாடல்கள்
7.15 பிறந்தநாள் வாழ்த்துக்கள்
7.30 பொங்கும் பூபாளம்
7.45 செய்தியரங்கம்
8.00 பொங்கும் பூபாளம்
8.15 பலதும் பத்தும் *
8.45 செய்தியரங்கம்
9.00 இசையமுதம் *
9.30 விமர்சகர் விருப்பம் *
10.00 விடியலைத் தேடும் கானங்கள் *
10.30 கவிதையும் கானமும் *
11.00 தேன்கிண்ணம் *
12.00 தொடர்ந்தும் பல்சுவை நிகழ்ச்சிகளை நேயர்கள் கேட்கலாம்.

## புதன் காலை

6.00 கீதாஞ்சலி
6.45 செய்தியரங்கம்
7.00 நம்நாட்டுப்பாடல்கள்
7.15 பிறந்தநாள் வாழ்த்துக்கள்
7.30 பொங்கும் பூபாளம்
7.45 செய்தியரங்கம்
8.00 பொங்கும் பூபாளம்
8.15 விடுதலை இலக்கியம் *
8.45 செய்தியரங்கம்
9.00 சங்கநாதம் *
9.30 நாடகம் *
9.45 ஒலிபரப்பாளர் விருப்பம்
10.00 நீங்கள் கேட்டதும் நாங்கள் தருவதும் *
11.00 ஜீவ ஒலி *
12.00 தொடர்ந்தும் பல்சுவை நிகழ்ச்சிகளை நேயர்கள் கேட்கலாம்.

## வியாழன் காலை

6.00 கீதாஞ்சலி
6.45 செய்தியரங்கம்
7.00 நம்நாட்டுப்பாடல்கள்
7.15 பிறந்தநாள் வாழ்த்துக்கள்
7.30 பொங்கும் பூபாளம்
7.45 செய்தியரங்கம்
8.00 பொங்கும் பூபாளம்
8.15 இலக்கியச்சாரல் *
8.45 செய்தியரங்கம்
9.00 இசையமுதம் ★
9.30 பூவையரும் பூவுலகமும் *
10.00 முத்துப்பந்தல் *
11.00 சிறுவர் மன்றம் *
12.00 தொடர்ந்தும் பல்சுவை நிகழ்ச்சிகளை நேயர்கள் கேட்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவ்வாய் மாலை

5.00 தலைப்புச் செய்திகள்
5.15 இசைமாலை
6.00 ஜீவ ஒலி
7.00 கனடிய உலகச் செய்திகள்
7.15 பிறந்தநாள் வாழ்த்துக்கள்
7.30 சங்கநாதம்
8.00 விடுதலை இலக்கியம்
8.30 BBC தமிழோசை +/ நினைவில் நிற்பவை
9.00 நாடகம் - "அலைகடலுக்கப்பால்"
9.15 நிறையும் குறையும்
9.30 செய்தியரங்கம்
10.00 நீங்கள் கேட்டதும் நாங்கள் தருவதும்
11.00 தொடர்ந்தும் பல்சுவை நிகழ்ச்சிகளை நேயர்கள் கேட்கலாம்.

## புதன் மாலை

5.00 தலைப்புச் செய்திகள்
5.15 இசைமாலை
5.30 சிறுவர் மன்றம் (நேரடி ஒலிபரப்பு)
6.30 பூவையரும் பூவுலகமும்
7.00 கனடிய உலகச் செய்திகள்
7.15 பிறந்தநாள் வாழ்த்துக்கள்
7.30 இலக்கியச்சாரல்
8.00 இசையமுதம் ★
8.30 BBC தமிழோசை +/ நினைவில் நிற்பவை
9.00 விமர்சகர் விருப்பம்
9.30 செய்தியரங்கம்
10.00 முத்துப்பந்தல்
11.00 தொடர்ந்தும் பல்சுவை நிகழ்ச்சிகளை நேயர்கள் கேட்கலாம்.

## வியாழன் மாலை

5.00 தலைப்புச் செய்திகள்
5.15 இசைமாலை
6.00 சாயி அருளமுதம்
7.00 கனடிய உலகச் செய்திகள்
7.15 பிறந்தநாள் வாழ்த்துக்கள்
7.30 கேள்வியும் நீங்கள் பதிலும் நீங்கள் ✷
8.00 இசையணித் தேர்வு
8.30 BBC தமிழோசை +/ நினைவில் நிற்பவை
9.00 நாடகம் (கந்தர் கதிர்காமத்தம்பி உலகநாதர்)
9.15 கின்னஸ் புத்தகத்திலிருந்து
9.30 செய்தியரங்கம்
10.00 நீங்கள் கேட்டதும் நாங்கள் தருவதும்
11.00 தொடர்ந்தும் பல்சுவை நிகழ்ச்சிகளை நேயர்கள் கேட்கலாம்.


✷ - போட்டி நிகழ்ச்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் கூட
பகலில்தான்
சுடரும் நிலா கூட
இரவில்தான்

கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின்
24 மணிநேர ஒலிபரப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளி காலை

6.00 கீதாஞ்சலி
6.45 செய்தியரங்கம்
7.00 நம்நாட்டுப்பாடல்கள்
7.15 பிறந்தநாள் வாழ்த்துக்கள்
7.30 பொங்கும் பூபாளம்
7.45 செய்தியரங்கம்
8.00 பொங்கும் பூபாளம்
8.30 கின்னஸ் புத்தகத்திலிருந்து *
8.45 செய்தியரங்கம்
9.00 இசையணித் தேர்வு *
9.30 நாடகம் *
9.45 ஒலிபரப்பாளர் விருப்பம்
10.00 சாஜி அருளமுதம் *
11.00 நீங்கள் கேட்டதும் நாங்கள் தருவதும் *
12.00 தொடர்ந்தும் பல்சுவை நிகழ்ச்சிகளை நேயர்கள் கேட்கலாம்.

## கேள்வியும் நீங்கள் பதிலும் நீங்கள்

போட்டி நிகழ்ச்சி

பிரதி வியாழக்கிழமைதோறும் மாலை 7.30 மணிக்கு

**416-429-5290**

## சனி காலை

6.00 கீதாஞ்சலி
6.45 செய்தியரங்கம்
7.00 நம்நாட்டுப்பாடல்கள்
7.15 பிறந்தநாள் வாழ்த்துக்கள்
7.30 பொங்கும் பூபாளம்
7.45 செய்தியரங்கம்
8.00 இசையமுதம் *
8.30 நாடகம் *
8.45 செய்தியரங்கம்
9.00 விடுமுறை விருப்பம்
10.00 கலந்துரையாடல் *
11.00 மாணவர் மன்றம் *
11.30 இதயராகம் *
12.00 வானொலி குறுக்கெழுத்து *
12.30 தொடர்ந்தும் பல்சுவை நிகழ்ச்சிகளை நேயர்கள் கேட்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளி மாலை

5.00 தலைப்புச் செய்திகள்
5.15 இசைமாலை
6.00 மாணவர் மன்றம்
6.30 இதயராகம்
7.00 கனடிய உலகச் செய்திகள்
7.15 பிறந்தநாள் வாழ்த்துக்கள்
7.30 வானொலி குறுக்கெழுத்து ✹
8.00 இசையமுதம் ★
8.30 BBC தமிழோசை +/ நினைவில் நிற்பவை
9.00 நாடகம் - "வாழ்ந்து பார்க்கலாம்"
9.15 நிறையும் குறையும்
9.30 செய்தியரங்கம்
10.00 கலந்துரையாடல் (talk Show)
11.00 தொடர்ந்தும் பல்சுவை நிகழ்ச்சிகளை நேயர்கள் கேட்கலாம்.

## தமிழ்மூலம் உரையாடல் நிபந்தனைகள்

1. ஆங்கிலச்சொல் தவிர்க்கப்படல் வேண்டும்
2. ஆம்/ இல்லை/ வில்லை தவிர்க்கப்படல் வேண்டும்
3. ஒரு சொல்லை இரண்டு தடவைக்குமேல் பாவித்தல் தவிர்க்கப்படல்
4. தொடர்ந்து ஐந்து நிமிடங்கள் மௌனம் சாதித்தல்
5. சுற்றிவளைத்துப் பேசுதல் தவிர்க்கப்படல் வேண்டும்

**416-429-5290**

## சனி மாலை

5.00 தலைப்புச் செய்திகள்
5.15 இவ்வார நேயர்
5.30 மௌனம் கலைக்கும் வானம்பாடிகள்
6.00 தமிழோசை
7.00 கனடிய உலகச் செய்திகள்
7.15 பிறந்தநாள் வாழ்த்துக்கள்
7.30 சந்திப்பு
8.00 தமிழ்மூலம் உரையாடல்
8.30 BBC தமிழோசை +/ நினைவில் நிற்பவை
9.00 நாடகம்
9.15 நிறையும் குறையும்
9.30 செய்தியரங்கம்
10.00 கலந்துரையாடல்
11.00 தொடர்ந்தும் பல்சுவை நிகழ்ச்சிகளை நேயர்கள் கேட்கலாம்.

# 'ரோஜா' மாத இதழ்
# மாணவர் இலக்கியப் போட்டிகள்

'ரோஜா' இளம் வாசகர்களுக்கு ஓர் இனிய செய்தி. மாணவர் மத்தியில் தமிழ் அறிவை வளர்க்கவும் எழுத்து ஆற்றல் உள்ளவர்களை இனங்கண்டு அவர்களை ஊக்குவிக்கவும் 'ரோஜா' சஞ்சிகை அதன் மூன்றாவது ஆண்டு நிறைவினையொட்டி மாணவர்களுக்கு இலக்கியப் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.

பின்வரும் மூன்று மூன்று பிரிவுகளில் நடக்கும் இப்போட்டிக்குப் பாரதூரமான விதிகள் எதுவும் கிடையா. இரு விதிகள் மட்டுமே:

(1) வயதையும் படைப்பு உங்கள் சொந்த முயற்சிதான் என்பதையும் நீங்கள் தமிழ் கற்கும் ஆசிரியர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(2) இந்த உறுதியுரையுடன் உங்கள் படைப்புகளை

"ROJAH"
F.P.P.O., P.O.Box 45593,
747 Don Mills Road,
Don Mills, ON. M3C 3S4.

என்ற முகவரிக்கு ஜூன் 01, 1996ம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும். ஒருவர் விரும்பின் அவரது பிரிவின்கீழ் உள்ள விடயங்கள் எல்லாவற்றிலும் பங்கு பற்றலாம். அதாவது, ஒருவர் அவரது பிரிவின்கீழ் கட்டுரையும் அனுப்பலாம்; கதை, கவிதை என்பனவும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ஆக்கம் மட்டுமே அனுப்புதல் வேண்டும். வெற்றிபெறுவோருக்கு தக்க பரிசில்கள் உண்டு.

உங்கள் அனைத்துத் தேவைகளையும்
பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

PRINCESS PLAZA வில்
துவாரகாஸ்

1670 Victoria Park Ave.,
Toronto, Ont.
Tel: (416) 757-1091



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பிரிவிலும்.........

முதலாம் பரிசு - வெற்றிக் கிண்ணமும், புத்தகப் பொதியும்
இரண்டாம் பரிசு - புத்தகப் பொதி
மூன்றாம் பரிசு - புத்தகப் பொதி

(வெற்றி பெற்றவர்கள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.)

## கீழ்ப் பிரிவு: 12 - 14 வயது

1. பின்வரும் பொருள்களில் விரும்பிய ஒன்றினைப்பற்றி இரண்டு பக்க அளவினதான ஒரு கட்டுரை:
   (1) தமிழ் மொழி
   (2) சோமசுந்தரப் புலவர்
   (3) எனது பாடசாலை
2. ஏதாவது ஒரு சிறு கதை இரண்டு பக்க அளவில்

## மத்திய பிரிவு: 15 - 17 வயது

1. பின்வரும் பொருள்களில் விரும்பிய ஒன்றினைப்பற்றி மூன்று பக்க அளவினதான ஒரு கட்டுரை:
   (1) சேர் பொன் இராமநாதன்
   (2) கண்ணகி
   (3) மகாகவி பாரதியார்
2. விரும்பிய பொருளில் ஒரு கவிதை
3. மூன்று பக்க அளவில் ஒரு சிறு கதை

## மேற்பிரிவு: 18 - 20 வயது

1. பின்வரும் பொருள்களில் விரும்பிய ஒன்றினைப்பற்றி நான்கு பக்க அளவினதான ஒரு கட்டுரை:
   (1) திருக்குறளின் பெருமை
   (2) தமிழர் விழாக்கள்
   (3) கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
2. விரும்பிய ஒரு கவிதை
3. ஒரு சிறு கதை - நான்கு பக்க அளவில்
4. ஓரங்க நாடகம் ஒன்று - நான்கு பக்க அளவில்

(பரிசில்களை வழங்க இருக்கும் ஸ்தாபனங்களின் விபரங்கள் 'ரோஜா' மாசி 1996 இதழில் (அடுத்த இதழ்) அறியத்தரப்படும்.)

**யாவும் உங்கள் சொந்தப் படைப்புகளாக இருத்தல் வேண்டும் என்பதனை மீண்டும் நினைவுபடுத்துகின்றோம். வாழ்த்துக்கள்!**

~ ஆசிரியர் ~


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Pillayar Traders

உங்கள் அனைத்து தேவைகளையும்
ஒரே இடத்தில் பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

## பிள்ளையார் ட்ரேடர்ஸ்

3060 Lawrence Ave.E., Scarborough, ON.
(at Lawrence & Markham)

**Tel: (416) 438-7746**




# PORTELLO

## மார்ச் 15ம் திகதி முதல்

உங்களுக்கான சிறந்த சேவை கருதி
ஸ்காபரோ மத்தியில் இடம் மாறுகிறது
போர்ட்டலோ ஸ்தாபனம்!

## தற்பொழுது புதிய பொலிவுடன்
## எல்லா வர்த்தக நிலையத்திலும்

உங்கள் அழைப்புகளுக்கு
புதிய இலக்கங்கள்:

**Tel: 416-293-6555**
**Fax: 416-293-6459**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GASA Restaurant

இலங்கை, இந்திய, கனேடிய உணவகம்

## Take Out & Catering

உங்கள் அனைத்து வைபவங்களிற்கும் நீங்கள்
விரும்பிய உணவுகளையும் சிற்றுண்டி
வகைகளையும் சுவையுடன் செய்து தருகிறோம்.

## சுவை, அது *GASA!!!*

மலிவு விலையில்....

| | |
|---|---|
| * Rice with 4 Veg. + 1 Meat Curry | **$4.75** |
| * 10 Chicken Wings with Fries | **$3.99** |
| * 5 Chicken Wings with Fries | **$1.99** |
| * கொத்துரொட்டி (ஆடு, மாடு, கோழி) | **$3.99** |
| * 2 ரொட்டி + கறி | **$2.99** |

**Tel: (416) 321-1219**

2950 Kennedy Road, Unit. 3
(Kennedy & North of Finch)
Scarborough, ON




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ComData
## TECHNO COLLEGE



**CLASSES:**
**Mornings**
**Afternoons**
**Evenings**
**Weekends**

☑ All our courses are 100% instructor led

- Networking
- Programming
- Applications
- Hardware
- Accounting
- Internet
- Desktop/Presentation

தமிழிலும்
விளக்கம்
தரப்படும்

**Special programs:**
- Administrative Assistant
- Financial Assistant
- PC Lan Specialists
- Network Engineering
- Computer programmer

**INTERNET**
Application
Home page creation
Installation & Config.

**SPECIAL**
Classes
for Kids

Lantastic
Windows NT
**Novell CNA/CNE/MCNE**
OS/2 Lan Manager
Unixware

**INTRODUCTION**
Internet
Computers

**MULTIMEDIA**
Photoshop
Video Animation

| | | | |
|---|---|---|---|
| Keyboarding | MS-DOS | C/C++ | SQL/Oracle |
| Data Entry | Windows-3.11/95 | Visual Basic | Power Builder |
| Word Perfect | OS/2 Warp | Visual C++ | Accpac G/L,A/P,A/R &Payroll |
| MS-Word | Unix | FoxPro | Bedford |
| Excel | CorelDRAW | Pascal | Data Communication |
| Lotus 123 | Page Maker | Clipper | Telephony |
| Amipro | Freelance | Delphi | *PC Assembly & Trouble shooting* |
| dBase | PowerPoint | dBase | *Printer Trouble Shooting* |
| AutoCAD | Havard Graphics | Cobol | *Multimedia Inst. & Config.* |
| | | Access | |

For all your computer courses **Call: (416) 412-4354**

e-mail: comdata@inforamp.net

**1240 Ellesmere Rd., Suite 203, Scarborough, ON., M1P 2X4 Fax:(416) 412-4355**
(Midland/Ellesmere, near Midland RT Station)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்காபரோ நோர்த்யோர்க், ரொறொன்ரோ, மிசிஸாகாவைச் சேர்ந்த, பத்திரிகை, கலை இலக்கியத்துறை, பொதுப் பணிகளில் பங்காற்றிக் கொண்டிருக்கும் பலரில் ஒரு சிலரோடு உரையாடுகையின்போது இப்படித் தெரிவிக்கிறார்கள்.

நான் மின்கணனிமூலம் தமிழில் முன்னேறிவிட்டபோதும் இன்னமும் எழுத்துப் பிழைகள் தாராளமாக வருகின்றனவே இதுபற்றி என்ன கருதுகின்றீர்கள் ?

# பயன்தரும் உரையாடல்

~ சிவா சின்னத்தம்பி ~

நபர் 1: முன்னையைவிட பிழைகள் தற்போது குறைவாகவே உள்ளன. பிழைகளை முற்றாகக் களைவதற்கு மின் கணனியாளரின் தமிழறிவு முக்கியமானது. மற்றும் "புருவ் றீடஸ்" எனப்படும் சரிபார்ப்பு, தொழில்நுட்பம் அவசர வேலை முறை தவிர்க்கப்படல் வேண்டும்.

நான்: அவைகளைக் கடைப்பிடித்து முழுநேரமாக ஈடுபடுவோரின் பதிப்புகளிலும் இடம்பெறுகின்றனவே!

நபர் 1: அதில் நிதி, நேரம், அனுபவம் என்பனவுடன் சம்பந்தப்படுகின்றது.

நான்: இந்தக் காரணங்களால் பிழையான தமிழ் நடை, அல்லது எழுத்துப்பிழை இவைகளை அனுமதிக்கலாமா?

நபர் 1: நிச்சயமாக அனுமதிக்க முடியாது ஆனால் மக்களும் இவைகளைக் கண்டும் காணாதவராகவும் குறைகளைக் கூறி பழிகளைக் சம்பாதிக்க விரும்பாதவர்களாயும் வாழப் பழகி வருகிறார்கள்.

நான்: மக்கள் என்ன செய்யமுடியும் இவை சம்பந்தப்பட்டவர்களல்லவா கவனம் எடுக்க வேண்டும்.

நபர் 1: உண்மைதான். அதிக எழுத்துப் பிழைகளுடனும் வசனப் பிழைகளுடனும் தங்கள் வெளியீடுகளை வெளியிடுவோர் தாங்களே தங்கள் தவறுகளுக்கு வருந்தித் திருந்தாதவரை இந்த விடயத்தில் திருந்துவதற்கு இடமில்லை.

நான்: அப்படி என்றால் தவறு செய்பவர் வருந்தும்வரைக்கும் தமிழ்ப் பிழையைத் திருத்த முடியாது என்கிறீர். சரி, தம்பி மோகன் மின்கணனிச் செயற்பாடுகள் வளர்வுற்றுள்ள இன்றைய நிலையில் மின்கணனிச் செயற்பாடுகள், உபகரணங்கள் போன்றவற்றுக்கான கலைச்சொல் அகராதி தமிழில் இல்லையே ஏன்?

நபர் 1: நீங்கள் கேட்பது சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய ஒரு நல்ல விடயம். இவை அவரவர் விருப்பில் எழுந்தமானத் தமிழ் ஆக்கத்துக்கு வசப்படுமாயின் நல்லதல்ல. உதாரணமாக *Internet* என்பதற்கு ஒரு தமிழ்ச்சொல் இன்னும் இல்லை. இதுபற்றி தமிழறிந்த வல்லுனர் எவரும் ஒரு சொல்லைத் தருபவர் இல்லை எனக்கூறலாம்.

நான்: ஏன் தம்பி *Internet* என்பதை உள்வலை என்றால் என்ன? அல்லது உள்ளக வலை, உட்புற வலை, இப்படி எது பொருந்தும் என்பதை மின்கணனித் தமிழ் தேர்ச்சி மிக்க; பணிபுரிகின்ற மற்றும் தமிழறிந்த சகலரும் ஒருங்குகூடி, விவாதித்து ஒரு முடிவுக்கு வந்து அகராதி ஒன்றை

சிறப்பாசிரியர் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்க முடியாதா?

நபர்$_1$: பூனைக்கு மணிகட்டுவது யார்

அதுதான் இப்போது பிரச்சனை. மின்கணனி, தமிழச்சு வேலைகள் கனடாவில் கணிசமான அளவு முன்னேறியுள்ளது எனலாம். தமிழகம், தமிழீழம் மற்றும் ஏனைய நாட்டுத் தமிழரை விட கனேடியத்தமிழர் இதிலே கவனம் செலுத்தினால் நன்மையுண்டு. ஏதாவது ஒரு ஊடகமூலம் இத்துறையைச் சார்ந்தவர்களை இணைத்தாக வேண்டும். அப்போதுதான் வழிபிறக்கும்.

நான்: ஓரளவு சொற்களுக்கு தமிழ் அகராதியிலே ஒத்த கருத்துச் சொற்கள் இருக்கின்றன. எந்தச் சொல்லுக்கும் ஒரு சொல்லைத் தரமுடியாமல் தமிழ் இல்லை என்று நான் கருதுகிறேன். நீர் என்ன கருதுகின்றீர் என்றதற்கு அருகிருந்த நபர்$_2$........

நபர்$_2$: முதலில் மின்கணனி பற்றிய சகல ஆங்கில சொற்பதங்களுக்குரிய அட்டவணை ஒன்றைத் தயாரித்து அதற்கான தமிழ் ஆக்கத்தைச் செய்து பொது நடைமுறைக்குக் கொண்டு வரலாம்.

நபர்$_1$: அதற்கு முன்பாக ஆங்கிலச் சொற்களுக்கு சரியான தமிழ் சொற்களை தரும்படி தமிழாய்வாளர்களைக் கேட்கலாம், அல்லது *Internet* மூலமாகவே இதற்கு ஒரு சில விண்ணப்பங்களையும் சொற்பதங்களையும் பிரயோகிக்கலாம் என்று தோன்றுகின்றது. அது சம்பந்தப்பட்டவர்களிடம் இதுபற்றி யோசிக்கலாம்.

நான்: என்ன யோசிக்கவுள்ளது மின்கணனி வேகத்தில் உங்கள் வேலைகள் தொடர்ந்தால் தமிழில் அகராதி வரவாய்ப்புண்டு. அதிருக்க, தமிழ் எழுத்து வடிவமைப்பை இலகுவாக்க முடியாதா?

நபர்$_3$: முடியும். தட்டச்சு முறைக்கு ஏற்ப "ஊ" னா வாக்கப்பட்டதுபோல எழுத்திலே மாற்றங்கள் கொண்டு வரப்படல் வேண்டும். ஏனெனில் அடுத்த தலைமுறை கையால் எழுதுவதற்குப் பதிலாக மின்கணனியை இயக்குவதன் மூலம் எழுத்து வேலையைச் செய்யப்போகின்றார்கள். அதனால் வடிவமைப்பில் மாற்றம் முக்கியத்துவமானதுதான்.



நபர்$_1$: யாரோ எழுத்தை வடிவமைக்க யார் யாரோ பிரதிபண்ணி பலனை அனுபவித்து வருகிறார்களே......

நான்: நீங்கள் கூறுவது தமிழ் எழுத்தின் வடிவங்களை, நான் கூறுவது எழுத்தில் மாற்றங்களை இது சந்தைப்படுத்துவது சம்பந்தமானது அல்ல. எல்லாருக்கும் பொதுவான தமிழ் உருவ மாற்றம் இத்துறையில் நிபுணத்துவமுள்ளவர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் ஒன்று கூடித் தீர்மானிப்பது நல்லது இல்லையா?

சிறப்பாசிரியர் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Typesetting

பத்திரிகைகள்

சஞ்சிகைகள்

விழா மலர்கள்

நினைவு மலர்கள்

விளம்பரப் பிரசுரங்கள்

திருமண அழைப்பிதழ்கள்

GRAPHIC DESIGN | LAYOUT | TYPESETTING

உங்களுக்குத் தேவையான சகல அச்சமைப்புத் தேவைகளையும்
அழகான முறையில் நிறைவேற்றிக்கொள்ள...

எஸ். கிரிஷாந்
ரைப்செட்டிங்

றோஜா

F.P.P.O., P.O. Box 45593, 747 Don Mills Road,
Don Mills, ON. M3C 1G9

Tel: (416) 425-2884 Fax: (416) 425-2625



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்டப் புளுகு

முன்னொரு காலத்தில் ஆர்மீனிய நாட்டில் மிக மோசமான பஞ்சம் நிலவியது. மக்கள் உண்ண உணவின்றி அல்லற் பட்டனர். புல் பூண்டுகளும் கருகி விட்டதால் கால் நடைகளும் மடிந்தன. இதனால் மக்கள் பல வகையான கெட்ட வழிகளிலும் ஈடுபடத் தொடங்கி விட்டனர். அந்த நாட்டை ஆண்ட ராஜாவுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. முரசு கொட்டுவோனை அழைத்து "இந்த நாட்டில் மிகப் பெரிய புளுகை யார் சொல்லுகின்றாரோ அவருக்குத் தங்க மாம்பழம் பரிசாகக் கொடுக்கப்படும் என்று முரசு கொட்டும்படி உத்தரவிட்டார்.

முரசு கொட்டப்பெற்றதும் ஊரில் உள்ளவர்கள் அண்டப் புளுகுப் போட்டியில் கலந்து மாம்பழத்தை தட்டிக் கொள்ளப் பார்த்தனர். ஒரே போட்டி செல்வந்தர், வியாபாரிகள், அரச அதிகாரிகள் அமைச்சர்களின் பிள்ளைகள் உட்பட எல்லோரும் பாரபட்சமின்றிக் கலந்து கொண்டனர். ஒருவரை யொருவர்மிஞ்சும் வகையில் பொய்களைச் சொன்ன போதும் யாருடைய பொய்ப் புளுகுகளிலும் ராஜா திருப்தியடையவில்லை.

கடைசியில் ஒரு வயோதிபர் பிச்சைப் பாத்திரம் ஏந்திக் கொண்டு வந்து நின்றார். ராஜா வயோதிபரைப் பார்த்து என்னவேண்டுமென்று கேட்டார். வயோதிபரோ "நான் கடனாகக் கொடுத்த பொற்காசுகளைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் ராஜாவே" என்றான்.

சிறப்பாசிரியர் பக்கம்



ராஜாவுக்கு கடுங்கோபம்; நான் எப்போது உன்னிடம் கடன் வாங்கினேன்? கடன் வாங்கியிருந்தாலல்லவா திருப்பிக் கொடுக்க? என்று பொறுமை இழந்தவராய், வயோதிபரே நீ சரியான அண்டப் புளுகன் என்றார். ராஜா நீங்கள் அப்படி நினைப்பீர்களானால் பரிசு தருவதாக அறிவித்த தங்க மாம்பழத்தை தயவு செய்து எனது பாத்திரத்தினுள் போடுங்கள் என்றான்.

ராஜாவுக்கு வயோதிபரின் தந்திரம் அப்போதுதான் புரிந்தது. ஒருவாறு தனது கோபத்தை அடக்கிக் கொண்டு வயோதிபரே நீர் புளுகவில்லை சொன்னது உண்மைதான் என்றார்.

அப்படி என்றால் நான் கொடுத்த பொற்காசுகளைத் திருப்பித் தாருங்கள் என்றான்.

ராஜா வேறு வழியின்றி அவனது பிச்சைப் பாத்திரம் நிறைய பொற் காசுகளை வழங்கவேண்டியதாயிற்று.

ராஜாவாக இருந்தாலும் வாக்குறுதி களோடு விளையாடமுடியாது என்பதைப் புரிந்த பிச்சைக்காரன் தன் கைவரிசையைத் தருணம் பார்த்து நடத்தித் தன் விடயத்தை சாதித்து விட்டான்.

~ துர்க்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தி

தொலை பேசிகளைத் தூக்கி
தொல்லை தரும் பிறவிகளாய்
அதில் தாவி அலட்டுகின்ற
எளியநிலை இன்று கனடாவில்
குரைத்து மிகக் குட்டிகளாய்
கீலத்துக்கு ஈனமுடன்
விலைபோகும் சில வா(நா)ய்களின்
தலைமீது பட்டை தீட்டாத வைரமோ!
அன்றில்
தரம் கெட்ட தம் பட்டமோ!

எறும்பூரக் கல்லும் கரையும் என்பர்
இந்தச் செழும்பூறி எவை கரையும்?
தழும்பு ஊறித் தமிழர் மனங்கள்
தன்னடக்கம் தளிராகி மிளிர்ந்து
மழுங்கிக் கிடந்தோரும்
மிக்கநல் உணர்வோடு மிதந்துவர
செழும்புகளோ ஊற வழியின்றி
சிறு கரித்துண்டாய் சுவரோடு
சீண்டிச் சீரழியும் சிந்தி!

~ தேன்மொழி

## பரிசுத்தம்

வாழ்வில் வருவது - அனைத்தும்
பாவம் ஒன்றுதான்
போவது மட்டுமே
புண்ணியம் ஆகும்........

கருவினில் தொடங்கி
கருமாதி வரைக்கும்
கூடவே வருவது
கருமம் ஒன்றுதான்

குற்றம் அற்றொரு
கொடுத்து வாழ்கிற
சுற்றம் இருப்பின்
பரிசுத்தம் ஆகும்.

~ சிவா சின்னத்தம்பி

**சிறப்பாசிரியர் பக்கம்**

## மனிதா உணர்ந்திடு

மனிதரின் வாழ்வில் மயக்கம்
சற்றுத் தெளிந்ததும் தயக்கம்
இல்லையே ஏதும் என்ற ஏக்கம் -
அவை
அகன்றதும் அவர்களில் மாற்றம்
அறிவினில் அறியாக் கலக்கம்
அடிபடக் கூட நினைக்கும்
எதிலுமே ஏதும் இல்லை......
உணர்ந்திடு மனிதா உணர்ந்திடு

~ ஈஸ்வரி



## வாகனங்கள்

வாழ்வில் இதம் தரும் வாகனங்கள்
வாழ்வையே சரித்துவிடும் - அதன்
வேகங்கள் விரைந்து விட்டால்.....

மனதிற்கு இதம்தரும் - மாதர்கள்
மனதையே உடைத்திடுவர் - மற்றவர்
மதி தடுமாறி விட்டால்

வாழ்வில் வருகின்ற மோகங்கள்
வேகங்கள் ஆகிவிட்டால்
வாழ்வே தடுமாறி விடும்......

~ துர்க்கா

# குறள் கூறும் புத்திமதி

நன்றி கொன்றவர்க்கு நலமான வாழ்வு இல்லை

நன்றியை மறந்து விடுபவர்கள் நிறையப்பேர். வேறு ஒரு வழியும் இல்லாமல் போகும் கட்டத்தில் தூக்கி உயர்த்திப் பேசிக் காரியத்தை சாதித்துக் கொண்டபின் காலில் போட்டு மிதிக்கவும் தயங்க மாட்டார்கள். தம்மை தூய்மைப்படுத்த எண்ணி அவரையே அவதூறாகவும் கூறி அங்கிருந்து மாறி விடுவார். இப்படியானவர்களைப் பார்க்கும் போதுதான் நல்லோரின் உள்ளம் வேதனையால் தவிக்கின்றது. தனிமையாகி விடுகின்றது.

நன்றி மறப்பது நல்லதல்ல. எவருக்கும் புரியாமல் அல்ல. ஆனால் சிலர் அதை மறந்தே விடுகின்றனர். நன்றியைக் கொன்று விட்டவர்களுக்கெல்லாம் நல்ல வாழ்வு கிடையாது. இதை யான் கூறவில்லை வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார். இதன் உண்மையை நான் நேரில் கண்டு உணர்ந்திருக்கின்றேன். இன்று ஒருவரிடம் உதவி பெறும் வரை அவர்களை உயர்த்திப் பேசிவிட்டு அடுத்தநாள் இன்னொருவரிடம் உதவிபெறமுனைகின்றபோது முன்பு தனக்கு உதவியவரைமட்டமாகக் கூறுவது என்பதும் அவர்களைமதிக்காமல் நடந்து கொள்வது என்பதும் நன்றி கொன்ற செயல்களேயாகும். இவர்களெல்லாம் வாழ்வில் உயர்வடைவதென்பது தற்காலிகமானதே. நன்றியை உண்மையாகவே மறந்து திரிபவர்களுக்கு ஓரளவு மன்னிப்புடன் நன்றியைக் கொன்றவர்களுக்கு அவை கிடையாது. நன்றியை விட்டு வைக்காமல் அவர்தாம் கொன்றே விடுகின்றார்களே. நன்றி இருந்தாலாவது மன்னித்து அவரை வாழவைக்கும். நன்றியைக் கொன்றவர்கள் என்று கருதப்படுபவர்கள் தெரியாமல் நன்றியை மறந்தவரல்லர். வேண்டுமென்றே மறந்துதிரிவதோடு பின்னர் பழிகூறியும் பாவத்தைச் சேர்த்துக் கொள்பவர்கள் இவர்கள் தங்களது வாழ்வில் உயர்வடை-வதென்பது கேள்விக்குரிய விடயமாகும். இதன்காரணமாக வள்ளுவப் பெருந்தகை கூறிய வாழ்க்கைத் தத்துவம் பொதிந்த குறள் இதோ...

எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் - உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.

~ நேதா சின்னத்தம்பி

**சிறப்பாசிரியர் பக்கம்**



நான் தாங்க உங்க பையன்னோட கணித ஆசிரியர்.....

இரண்டும் இரண்டும் ஐந்தென்று என் பையன் சொல்லும்போதே உம்மை தெரிஞ்சுகிட்டேன் பாரும்!....

- சுரேஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 மணித்தியாலத்துக்குள்
வருமான வரிப்பணத்தை மீளப்பெறலாம்!

உங்கள் வருமான வரி
மீளல் விண்ணப்பப் பத்திரத்தை
மின் கணணியூடாக
(Electronically) செலுத்தி
காசோலையாக
உடன் பெறலாம்





PAN-TAX INC

868 Markham Road, Unit. 103, Scarborough
Tel: (416) 438-5000



பிரதி வெள்ளிக்கிழமைதோறும்
வாங்கிப் படிக்கத் தவறாதீர்கள்!

நம்நாடு
NAMNADHU
(416) 516-0241




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட தமிழீழத்தில் எண்ணற்ற கோடி பெறும் எவ்வளவோ உடமைகள் இருந்தன. வளம்மிகுந்த நிலபுலன்கள் பலரின்கை வசமிருந்தன. வானளாவிக் கொடிகட்டி வாழவேண்டுமென்றில்லா விட்டாலும் வயிரார ஒருவேளையாவது உண்டு கொடுத்து உயிர் வாழலாம் என்ற உறுதி இருந்தது. மானம் ஒன்றே பிரதானம் என்ற மன உணர்வு இருந்தது. மண்ணும் மொழியும் தமதிரு கண்களெனப் போற்றி மண்ணிலே வாழ்ந்து மடியவேண்டும் என்ற மன ஆதங்கம் இருந்தன. ஆனால் எல்லாமே சுக்கு நூறாகும் அளவிற்கு சிறீலங்கா அரச படைகளின் கெடுபிடிகள் இருந்தன.



# அறா வட்டி அம்பலவாணர்

~ துவாரேகா

எந்நாளும் அனர்த்தங்கள். எந்நேரமும் ஷெல்லடிகள் ஏராளம். குண்டடிகள் எந்த நிமிடமும் எவரது உயிரும் பறி போய் விடலாம் என்பதைத் தெரிந்துகொண்டும் அன்றாட வாழ்க்கையை அதற்கேற்றால்போல் அமைத்துக்கொண்டு வாழ்ந்து வந்த அந்த அழகான வலிகாமம் பகுதி முன்பொருகாலம் அமைதி பூத்திருந்த எழில்மிகு நந்தவனம் எழுத்தில் வர்ணிக்க முடியாது எத்தனையோ இரம்யமான நினைவுகளைத் தந்துகொண்டிருந்த இதய பூமி அது. கலைவாணியும், இலக்குமியும் வலிகாமப்பகுதி வீதிகளில் விளையாடிக்கொண்டிருப்பது போன்று அங்குவாழ் மக்களின் கனவுகளை நனவாகிக் கொண்டு வருவதை நேரில் பார்க்கக் கூடியதாக இருந்த பூமி. இப்பேர்ப்பட்ட பூமியில் பிறந்த எவருமே இந்தப் பூமியின் பெறுமதியை உணரத்தவறியவர்களாக இருக்க நியாயமில்லை. என்ன செய்வது!

சிறப்பாசிரியர் பக்கம்

எவளவிற்கு எவ்வளவு பெறுமதிகள் உயர்ந்து கொண்டு வந்தனவோ அத்தனை வளங்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்புக்கள் இருப்பதை உணர்ந்து செயற்பட்டதோர் காலகட்டத்தில் தான் முன்னோக்கிப் பாய்ச்சல் என்னும் நடவடிக்கை சிறீலங்காப் படைகளால் மேற்கொள்ளப் படப்போகிறது என்ற அச்சுறுத்தல் அந்தப்பூமி மீது எதிரொலித்தது. அந்தப் பூமியைச் சுற்றிவளைக்கப் போவதாக அரசின் அசட்டு முயற்சி ஆரம்பமானது. அப்பகுதி மககள் அல்லோல கல்லோலப் பட்டபடி அங்குமிங்குமாக ஓடஆரம்பித்தார்கள். உயிரைப் பணயம் வைத்துக் கொண்டிருப்பவர்களான இணையற்ற புலிகளின் ஒத்தாசையுடன் இடம் பெயர்ந்த மக்கள் ஒருவாறு பலாலிவீதிப் பகுதிகளையடைந்து உறவினர் வீடுகளிலும், இனம் தெரியாத முகங்களின் உதிவிகளைப் பெற்றும் ஒருவகைத் தென்பு கொண்ட அகதிகளாக தம் சொந்தப்பணத்தில் ஜீவித்த அகதிகளாக தம் சொந்த மனைகளுக்கு திரும்புவோம் என்ற நம்பிக்கையுடன் அங்கு வாழ் அக்கம் பக்கம் வாழ்ந்த ஓரளவு தெரிந்தும் தெரியாதவர்களிடம் கைமாற்றும், கடனும் பெற்று வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அந்த வேளை ஒரு வயோதிப குடும்பம் ஒன்று தமது பொருளாதார நெருக்கடியின் நிமித்தம் தாம்வைத்திருந்த மாடுகளையும், வண்டியையும் பொறுப்பு வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கொஞ்சம் பணம் புரட்டி அன்றாடம் பசி போக்க வேண்டிய சூழ்நிலையில் வாழ்ந்தார்கள். புதிய இடம்; வேலை இல்லை; தினமும் பணப்புழக்கம் இல்லை. தத்தளித்துக் கொண்டிருந்தவர்களுக்கு உதவுவது போல உதவ முன்வந்தார் ஒரு அறாவட்டி அம்பலவாணர். ஆயிரம் ஆயிரமாக அப்பப்போ கொடுத்து அந்த மாட்டு வண்டியை அப்படியே அபகரித்துக் கொண்டார்.

அந்த வயோதிபரின் மனதில் ஒரு துணிவிருந்தது. ஊரிலே இன்னோர் சோடி உசாரான மாடு வண்டி நிற்கிறது தானே, அதை வைத்துப் பழைத்துக் கொள்ளலாம் இது போனால் போகட்டும். தருவதைத் தாங்கோ அம்பலண்ணை என்று கணக்கை முடித்துக் கொண்டார். அறாவட்டி அம்பலவாணருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. நாப்பது போகக் கூடியதை இருபதிற்கு மடக்கியாச்சு என்ற உட்கருத்தோடு அப்பு ஏதாவது பிரச்சனையெண்டால் வாங்கோ! இங்கேயே தங்கலாம். எதுக்கும் முந்தி வந்திடுங்கோ என்று சொல்லி அனுப்புகிறார் என்ன அனுசரணை!

இதற்கிடையே அரச படைகளை உள்ளே முன்னேற விட்டு ஓரிரு நாட்கள் புலிகள் பின்வாங்கிவிட்டார்கள் என்ற மக்களின் தவறான ஆத்திரக்கணிப்புக்கு ஆளாகியும் கூட அனைத்துப் படைகளையும் சுற்றிவளைத்து அடிமேல் அடித்து ஓடவிரட்டிய உத்வேகம் நிறைந்த உத்வேகம் நிறைந்த உன்னத புலிப்பாய்ச்சலை உணர்வுள்ளவர்கள் மட்டுமல்ல அனைவருமே பாராட்டினார்கள். வரலாற்றில் இடம் பெற்ற ஒரு வீரப்புலிப்பாய்ச்சல் என்றால் மிகையாகாது. மீளத்திரும்பிய வலிகாமப்பகுதி மக்கள் மீண்டும் வாழ்வைத் தொடங்கினர். மீண்டும் அச்சுறுத்தல் படையெடுப்பு ஆரம்பமாகப் போகிறது. பாரிய படையெடுப்பு. இதில் நாப்பதினாயிரம் படைகளுக்கு மேல் பங்கு பற்றப் போகிறார்கள் என்று கதை அடிபட்டது. எதற்கும் முன்பிருந்த இடத்துக்குப்போய் தங்குவதுதான் நல்லது எனத் தீர்மானித்து வயோதிபக் குடும்பம் ஒருவாறு வைக்கல்கும்பி பக்கமாக விடப்பெற்ற மாடுகளையும் பிடித்து வண்டிலைப் பூட்டி தளபாடங்கள் மற்றும் சட்டிமுட்டிகள் எல்லாம் கட்டிக் கொண்டு சுமூகமான நேரமே வந்து சேர்ந்து விட்டனர். வரும்போதே அம்பலவாணர் கண்ணில் இவர்கள் பட்டுக் கொண்டதால் வண்டில் மாட்டில் அம்பலவாணரின்கண் பட்டுவிட்டது. நாளைக்கேபோய் கணக்காக முடித்துவிட வேண்டியதுதான் என்று எண்ணினார் அம்பலவாணர்.

**சிறப்பாசிரியர் பக்கம்**

அப்பு என்ன போனகையோடை திரும்பி வந்திட்டியள். இல்லை அந்தப் பக்கம் திரும்பவும் அடிக்கப் போறாங்களாம். வெள்ளம் வரமுந்தி வரம்புகட்ட வேணும் வெளிக்கிட்டு வந்திட்டன். வேணுமெண்டால் இந்த மாடு வண்டில் விற்க மாட்டேன் மீட்டுப்போடுவன். பொறுப்பு வைச்சுக் கொண்டு பத்தாயிரம் தந்தால் போதும்.



இந்தமுறை உது சரிவாராது. பொறுப்பு வைச்சு நீங்கள் மீட்கிறது எல்லாம் இனி எப்ப சரிவரப்போகுது. தேவை என்டால் விற்கிறதோ எண்டு சொல்லுங்கோ வாங்கிறன் கடனாய்த் தாரது சரிவராது. எனக்கும் இல்லை இது இன்னொரு ஆளுக்காகத்தான் கேட்கிறன்.... என்ன சொல்லுகிறீர்கள் நான் உங்களை நம்பித்தான் வந்தனான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலை வேற காசில்லை. கைமாத்தாய் ஆயிரம் எண்டாலும் தாங்கோ கடைக்குப் போட்டு வரவேணும்.

ஒரே பேச்சு விற்கிறதெண்டால் சொல்லுங்கோ தாறன். சரி என்ன விலை எண்டால் வாங்குவியள் இது முந்தினமாதிரியில்லை.... முப்பத்தைந்து போகும். முப்பதைத் தாங்கோ..... நாட்டு நிலைமையிலை என்ன என்னை மடையன் எண்டு நினைச்சியளோ.... பதினைஞ்சு எண்டால் சொல்லுங்கோஇப்ப காசு... என்ன அம்பலவாணர் அறாவட்டிதான் வாங்கிறநீங்கள் எணழுடு சொல்லுறவை நீங்லள் அறாவிலை கேட்கிறியள். எதுக்கும் நானும் அகதியாய் வந்திருக்கிறன் பிள்ளையளும் கனடாவிலை எங்கை இருக்கிறம் எண்டும் அதுகளுக்குத் தெரியாது போட்ட கடிதங்களுக்குப் பதில் வரேல்லை. எதுக்கும் பார்த்துத் தாருங்கோ.

சரி ஒரே விலை இருபது தாறன்... சரிதானே இந்தாங்கோ பிடியுங்கோ... வயோதிபரின் மனைவியார் உங்களுக்கென்ன விசரே உந்த விலைக்குக் குடுத்துப்போட்டு பிறகு வாங்குவியளே. நீ சும்மாயிரு எல்லாம் எனக்குத் தெரியும். வைக்கல் இல்லை தவிடு இல்லை இனி எங்களுக்குச் செலவுசெய்ய கையிலை ஒருசதமும் இல்லை என்னை என்ன செய்யச் சொல்லுறாய். எல்லாம் கடவுள் செயல் குடுப்பம். காசு வாங்கியும் விட்டார்கள். அவர் மாடு வண்டிலைப் பூட்டிக் கொண்டு போய்ச்சேர்ந்து இரண்டு மணித்தியாலம் இருக்கும்.

ஒரு அறிவித்தல் எல்லாரும் உடனடியாக ஊரைவிட்டு எழும்பி தென்மராட்சி, வடமராட்சி அல்லது வன்னிப்பகுதி எங்காவது போய்விடவேணும் என்ற அறிவித்தல். அதுவும் புலிகளிடமிருந்து. எல்லோரும் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வீதிகளால் நடத்தேபோக முடியாத மக்கள் வெள்ளம் கரைபுரளுகிறது. அம்பலவாணர் அப்புவைத் தேடுகிறார்....... அறாவட்டி இப்படிம் போகிறது என்று எண்ணியபடி.....

★★★★★

## தமிழ் பழமொழிகள்

தொகுத்தவர்: ஈஸ்வரி

அக்கரைக்கு இக்கரை பச்சை.
அகதி சொல் அம்பலம் எருது.
அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி புறத்தியே.
அகத்திலே ஆயிரம் ஆனாலும் புறத்தில் பேசலாமா?
அகத்துக்கு அழகு அகமுடையாள்!
அகப்பட்டுக் கொண்டவனுக்கு அட்டமத்துச்சனி.
ஓடிப்போனவனுக்கு ஒன்பதில் குரு.
அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே வைகுந்தம்.
அச்சம் அற்றவன் அம்பலம் ஏறுவான்.
அஞ்சினவனைக் குஞ்சும் மிரட்டும்.
அடக்கம் ஆயிரம் பொன் பெறும்.
அடன்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
அடிக்கிற கைதான் அணைக்கும்.
அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்று அறுக்கும்.
அரசன் எவ்வழி மக்களும் அவ்வழி.

சிறப்பாசிரியர் பக்கம்

எமது சித்திரை இதழின்
சிறப்பாசிரியர்
மு. கலாதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற உறவுகளுக்கப்பால் புனிதம்

-சிவதாஸ்
யாழ். மருத்துவபீட மாணவன்

மார்பகங்களுக்கப்பால்
மங்கையின்
மனதின் விசாலத்தை
விசாரிப்போம்

இடையழகில் மட்டும்
எடைபோட முடியாதது மன அழகு
நடையழகின் வேகத்தைத் தாண்டி
அன்பின் சுவடுகளைத் தேடுவோம்


சுவைக்கத் தூண்டும்
செவ்விதழ்களைக் கடந்து
கனிவாகப் பரிமாறப்படும்
வார்த்தைகளுக்கு அடிமையாவோம்

பருத்த தொடையினை விடுத்து
மனப்பாரத்தை இறக்கிவைக்க
மடியினை தேடுவோம்

இலவம் பஞ்சுபோன்ற
மென் பாதங்களை மறந்து
வாழ்க்கையைச் சுமக்கும்
வலிமையான நடைதரும் கால்களுக்கு
கனவு காண்போம்

அழகாகக் கோர்க்கப்பட்டிருக்கும்
முல்லைமொட்டுகளையொத்த
பற்களையல்ல
மனப்புண் மாற்றும்
புதுமூலிகையை நாடுவோம்

கருமை பூசி நாட்டியமாடும்
கயல்விழிகளை யல்ல
இதயத் தாமரையை
விரிந்திடச் செய்யும்
கனிவான பார்வைக் கதிரினை
வேண்டி நிற்போம்



உருவங்களில்
கலைநயம் இருந்திடலாம்
ஆனால்
உறவுகளில்............
கவிநயம் வேண்டும்

புறத்தோலுக்கப்பால் தேடிடுவோம்
புதுராகம்
உருத்தெரிந்திடாத
உணர்வுகளின்
சங்கீதத்திற்கு

சாதி, மதம், இனம், மொழி
இவற்றைத் தாண்டுவதால் மட்டும்
காதல் புனிதமாகி விடாது
புற உருவங்களுக்கப்பாலும்
அதனுள்ளேயுள்ள புதுமை
உணரப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ச் 8 அனைத்துலக பெண்கள் தினம்

~ சக்தி

சங்க காலத்தில் பெண்களும் ஆண்களுக்குச் சமமாகவே கருதப்பட்டு வந்ததை சங்க இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். சங்ககாலப் பெண்கள் வீரத்தில் மிகவும் சிறந்து விளங்கியுள்ளனர். அக்காலத்தில் ஆண்கள் உணவுதேட, வேட்டையாடச் சென்ற வேளைகளில் பெண்கள் தினைப்புலம் காத்து நிற்பதும் , வீட்டு வேலைகளைக் கவனிப்பதும் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

பெண்கள் அஞ்சாது துணிந்து முறத்தால் புலியைத் துரத்தியதாகவும் பெண்களின் வீரக்கதைகள் சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளது.



இவ்வாறு சங்க இலக்கியங்களில் பெண்களும் ஆண்களுக்குச் சமனாக கருதப்பட்டு வந்துள்ளதைக் காணலாம்.ஆனால் சங்க காலத்திற்குப் பின்வந்த சங்கமருவிய, பல்லவ, நாயக்கர் காலங்களிலும், 20ம் நூற்றாண்டிலும் அந்நியக் கலப்பு சங்கத் தமிழரிடையே ஏற்பட்டதைத் தொடர்ந்து பெண்ணடிமையும் தொடக்கப்பட்டதையும் காணக்கூடியதாக உள்ளது.

ஆனால் பின்வந்த பெரியோர்கள் பெண்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு, அவர்கள் வீட்டினுள் அடிமைகளாகப் பூட்டப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டு, கல்வி அற்றவர்களாக வதைக்கப்படுவதைக் கண்டு வேதனையுற்று பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்து, பெண்குலத்தின் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென குரல்கொடுக்கத் தொடங்கினர்.

இல் வாழ்வில் ஆணுக்குத் துணைபுரிபவள் பெண். ஆதலால் மனைவியை 'வாழ்க்கைத் துணை' என்று திருக்குறள் குறிக்கிறது. ஆயினும் குலமாதர்க்கு இன்றியமையாத கற்பினைப் பாதுகாக்கக் கருதிய ஆடவர், பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தினர்.

கட்டுக் காவலும் மகளிர் கற்பினைக் காக்கும் என்ற கொள்கையை மறுத்தார் வள்ளுவர்.

"சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை"

என்பது அவர் வாக்கு.

கற்பின் பெயரால் மகளிரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைகாக்கும் கொடுமை இனி வருங்காலத்தில் நில்லாது. அது தகர்ந்து ஒழிவதற்கு நீண்டகாலம் செல்லாது என்றார் பாரதியார்.

"ஏட்டையும் பெண்கள் தொடுவது
தீமை என்று எண்ணி இருந்தவர்
மாய்ந்துவிட்டார் வீட்டுக்குள்ளே
பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"

வீட்டு வேலை செய்யும் பெண்களுக்கு ஏட்டுக் கல்வி எதற்கு? என்று சிலர் கேட்டனர். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்று பேசி அடிமைப்படுத்திய ஆண்களுக்கு நிகராகப் பெண்களும்,
"பட்டங்கள் அள்வதும் சட்டங்கள்
செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த
வந்தோம் - எட்டும் ஆறிவினில்
ஆணுக்கிங்கே பெண் - இளைப்பில்லை
காண் என்று கும்மியடி"

என்று எழுந்துள்ளனர். ஆண்களைப் போலவே நாங்களும் கல்வி கற்பேரம், பட்டங்கள் பெறுவோம், சட்டங்கள் செய்வோம், சபைகளில் அமர்வோம் என்கிறார்கள். அதைச் செயலிலும் காட்டி வருகின்றனர்.



கண்ணிரண்டும் ஒன்றையே காணுதல் போல, இல்வாழ்க்கையில் ஈடுபட்ட ஆணும் பெண்ணும் ஒருமையுற்று அறம்புரிதல் வேண்டும் என்று ஆன்றோர் பணித்தனர். அவ்வாறு இல்லறம் புரிவதற்கு ஆண்களும், பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்தல் வேண்டுமென்றோ. இக்கருத்தை உட்கொண்டு பாரதியாரும்
"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையிலும் நமக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமான மாக
வாழ்வோம்" என்றார்.

சங்ககாலத் தமிழர் வாழ்விற்குப் பின் இன்று தமிழீழத்திலும் பெண்கள் சமுதாயம் விழிப்படைந்துள்ளது. பெண்களும் ஆண்களுக்குச் சமனாக தாய் மண் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பெற்றோர்களாலும், சகோதரர்களாலும், சமுதாயத்தாலும், சீதனக் கொடுமையாலும் அடக்கி ஒடுக்கப்பட்டு, பூவும், பொட்டும், பொன்தாலி மட்டும் போதுமென்றிருந்த பெண்ணினம் இன்று,
"சாவா? நாம் சந்திப்போம்.
வாழ்க்கை எமக்கென்ன பூவா"
நாம் போராடுவோம்"

என்று பூவாக இருந்த பெண்கள் இன்று புயலாக மாறி, கழுத்திலே சயனைட் குப்பியையும், கையிலே கருவியையும், விழிகளிலே விடுதலை நெருப்பையும், நெஞ்சிலே தாயகக் கனவையும் சுமந்தபடி ஈழத்தாயை வருத்தும் பகைவரை அழித்து ஒழிக்க விடுதலைக்கு விலையாகும் வீராங்கனைகளாகி விட்டார்கள். இவர்களின் கனவு நிச்சயம் நிறைவேறும்.

★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை போராட்ட வரலாற்றில் இன்னொரு வெற்றிநமது மகளிரும் வேள்வித் தீயிலே இறங்கி விட்டிருப்பது. விடுதலை வேண்டும்......... மண்ணுக்கு மட்டுமல்ல பெண்ணுக்கும் என்பதைப் பேசுகிறது இக்கவிதை

~ கலைவாணி ராஜகுமாரன்



பூ வைத்துப் பொட்டிட்டு
உடலெல்லாம் நகை சுமந்து
பட்டுடுத்திப் பாங்காக
அன்னம் நடந்துவர
ஆஹா............ அழகென்றால்
பெண்ணென்றால் இவளன்றோ
ஈடு இணை ஏதென்றார்........!

வீதியிலே போகாதே வீணாகச் சிரிக்காதே
விலைபோகும் பண்டமல்லே...........!
தொலைதூரம் போகாதே.........!
துடுக்காகப் பேசாதே......!
இருட்டிலே திரியாதே......!
என்றென்னைப் பூட்டி வைத்தார்

கல்யாணச் சந்தையிலே
கைகட்டி நிற்கவைத்து
பொன்னும் பொருளும் பேசி
பொழுதெல்லாம் பேரம் பேசி
பாரம் தொலைந்ததென்று
என்னை எண்ணிப் பார்க்காமல் தள்ளி விட்டார்

இன்று.........
விடுதலைக் காற்றுவந்து வீசிடவே
என் தளைகளெல்லாம் அறுந்து
தலைநிமிர்ந்து நிற்கின்றேன்
பொன்னில்லை.........! பொட்டில்லை........!
பூவில்லை..........! புடவையில்லை........!
ஆனாலும்....... போகின்றாள் புரட்சிப்பெண்
இவளன்றோ பெண்ணின் பெருமை என்று
பேசுவதைக் கேட்கின்றேன்

"சிரிக்காதே........." என்றென்னைச் சிறை வைத்தோர்
சிரிப்பதற்காய் நான் அழுகின்றேன்
"இருட்டினிலே திரியாதே...." என்றவர்கள்
பாதையிலே வெளிச்சம் வர
நான் பயப்படாமல் நடக்கின்றேன்
பின்னிரவில் போகாதே பேய்பிடிக்கும் என்றவர்கள்
அடிமைப்பேய் விரட்ட
அஞ்சாது நடக்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணப் புகைப்படங்கள்
கையிலே ஒரு குழந்தை
புல்லான ஒரு புருஷன்
கல்லான ஒரு கணவன்
எனக்கு யாருமில்லை
துப்பாக்கியை என் குழந்தையாய்
தூக்கிக் கொள்கிறேன்
துணையாக விடுதலைக் கனவுகள்
வழகாட்ட கலங்காது நடக்கின்றேன்
புதைந்துபோன என் தோழிகளின்
புகைப்படங்களை மட்டுமே
புதையலாய் நான் பொத்தி வைத்திருக்கின்றேன்

நீண்ட நெடும் பயணம்
வழியெல்லாம் மரணபயம்
ஆனாலும்
மரபுச் சிறை உடைத்தேன்;
ஆணாதிக்கத்தை அடித்து விரட்டி விட்டேன்!
எனும் துணிவோடு தொடர்கின்றேன்!



## பெண்ணே இந்த உலகம் உனக்குத்தானே

~ பிரியத்

பெண்ணே! நிமிர்ந்து கொள்
இனியும் தலைகுனிந்தால்! நீ
இல்லாமல் போய்விடுவாய்
பெண்ணே! நிமிர்ந்து கொள்

காலம் காலமாக யன்னல் கம்பிகளோடு
கட்டப்பட்டதை அவிழ்த்து விடு
இது 21 நூற்றாண்டு
இன்னுமா சிறைகள் உனக்கு

சிறைகளை விட்டு வெளியில் வா
சிறகுகள் விரித்து பறந்து வா
அடுப்பங்கரையும் யன்னல் கம்பிகளுமே
உன் உலகின் எல்லைகள் என யார்
சொன்னது

கைவீசி நடக்கக்கூட கட்டுப்பாடுகள்
கழுத்தை நிமிர்த்தக்கூட தடை உத்தரவுகள்
மைபூசி பார்க்க மட்டும் உன் விழிகள்
மறக்கக்கூடாத சம்பிரதாய சட்டங்கள்

ஆதிக்கச் சுவர்களை அவர்கள் எழுப்பி
அதற்குள் உன் உலகை கூறு போட்டார்கள்
அடுப்பங்கரையில் உப்பு, புளி, பருப்போடு
வெப்பம், சூடு, வியர்வையில் உன் உலகம்

என்ன பாவமடி நீ செய்தாய்
எத்தனை பிரமன்கள் உன் தலைவிதி
எழுதும்
கன்னங்களில் கண்ணீர் பட்டுப் பட்டே
காயம்பட்ட பிறவி நீ என்றுதானே

சுதந்திரம் வேண்டும் என்று நீ கத்துகிறாய்
அடி பாவிப்பெண்ணே இது சுதந்திரமில்லை
உன் உரிமை, எடுத்துக்கொள்
நீயே சக்தி நீயே பிரம்மா எழுதிக்கொள்

பெண் விடுதலை பெண் விடுதலை என
பேசும்போதே நீ தப்பு செய்கிறாய்
நீங்கள் சுருங்கினீர்கள்
அவர்கள் சுற்றி சுவர் எழுப்பினார்கள்

நீங்களே நிமிர்ந்து கொள்ளுங்கள்
தாங்களாகவே அவர்கள் விலகிக்
கொள்வார்கள்
பெண்விடுதலை எனப் பேசிப் பலம்
இழக்காதீர்கள்
பெண்ணே இந்த உலகம் உனக்குத்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தகவல் ஐந்தாவது ஆண்டு பூர்த்தி விழாவும் விருது வழங்கும் வைபவமும்

வழமைபோல இவ்வாண்டும் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. முதலாவது அமர்வில் தமிழ் நிகழ்ச்சிகளும், இரண்டாவது அமர்வில் ஆங்கில நிகழ்ச்சிகளும் விருது வழங்கும் வைபவமும் நடைபெற்றது. இவ்விழாவில் திரு. நா. சிவலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினார். வரவேற்புரையை 'கீதவாணி' நடா ராஜ்குமாரும் தமிழ் வாழ்த்தை சுமங்கலா சண்முகநாதனும் ஆசியுரையை தியாக முருகானந்த சர்மாவும் மதிப்பீட்டுரையை கே. ரி. சண்முகராஜாவும், ஆர். என். லோகேந்திரலிங்கமும், வெளியீட்டு ரையை கவிநாயகர் கந்தவனம், அவர்களும் வழங்கினார்கள்.

இரண்டாவது அமர்வில் பிரதம விருந்தினராக ரொறன்ரோ நகர முதல்வர் பாபரா ஹோல் அவர்கள் சமூகமளித்து விழாவினை சிறப்பித்தார்.

இவ்வாண்டு வருடாந்த விருதுகளை திரு. அகஸ்ரின் ஜெயநாதன் சமூகசேவைக் காகவும், திரு. எஸ். எஸ். அச்சுதன்பிள்ளை நாடகத் துறைக்காகவும், திருமதி. கீதா யோகேந்திரன் நடனத்துறைக்காகவும் பெற்றனர்.

இவ்வாண்டின் சிறப்பு விருதுகளை அதிபர். பொ. கனகசபாபதி அவர்கள் கல்விப் பணிக்கான விருதினையும், திரு. அலி கொலபூர் அகதிகளுக்கான சேவை விருதி னையும் பெற்றனர். மேற்படி விருது பெற்ற ஐவரையும் விழாவில் அறிமுகம் செய்து வைத்து திருமதி. றொசலின் இராசநாயகம், திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம், திருமதி. மணி பத்மராஜா, வழக்கறிஞர் யசோ சின்னத்துரை, திரு. றொப் ஷ்றொப்ஷயர் உரையாற்றினார்கள்.

இவ்விழாவில் விருது பெறும் போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமராவில் புதிய தொழில்நுட்பம்...

திருமண விழா ஒன்று நடந்து கொண்டிருந்தது. நண்பர் ஒருவர் கமராவுடன் திருமணத்திற்கு வந்திருந்தார். புகைப்படச்சுருளை எடுத்தார். கமராவினுள் சுருளை மாட்டினார். திருமணம் முடிந்தது. நண்பர் புகைப்படச் சுருளை படம் கழுவும் நிலையத்தில் கொடுத்தார். என்னே சோகம்!






படம் வரவேயில்லை.நண்பர் சரியான முறையில் சுருளை *load* செய்யவில்லை. என்ன செய்வது? இந்த வகைத் தொல்லைக்கு விடிவே கிடையாதா? புகைப்படக் கலையைச் சரியாகத் தெரியாதவர்கள் புகைப்படம் எடுக்கவே முடியாதா? இதோ வந்திருக்கிறது *Kodak* நிறுவனத்துடன் *Fuji, Minolta, Canon, Nikon* ஆகியவை இணைந்து வெளியிடும் புதியவகைக் கமரா. இந்தப்புதிய வகையில் மேற்கூறிய தொல்லையே கிடையாது.

இந்த வகைக் கமரா புதிதாக விற்பனைக்கு வரவுள்ளது. புகைப்படத் துறையில் ஒரு புதியதொரு மாற்றம் எனக் கணிக்கப்படுகிறது. இதற்கு நீங்கள் புதியதொரு வகையைச் சார்ந்த படச்சுருளையே பாவிக்க வேண்டியிருக்கும். சுருளை இழுத்து பற்சக்கரத்தில் மாட்டவேண்டிய தொல்லை இனிக்கிடையாது. சுருளை கமராவிற்குள் போடுங்கள். கமராவைத் திறந்து சுருளை இழுத்து மாட்டாது, கமராவிலுள்ள துவாரத்தில் சுருளை செலுத்தியதும் நீங்கள் புகைப்படம் எடுக்கத் தயார். 5 படங்கள் எடுத்தபின் அவற்றைப் பார்க்க ஆவலாயிருக்கிறது. உடனே சுருளைக் கழற்றி படம் கழுவும் நிலையத்தில் கொடுத்து விடுங்கள். அவர்கள் நீங்கள் எடுத்த படங்களை மட்டும் கழுவித் தருவார்கள். திரும்பவும் கமராவில் சுருளை செலுத்துங்கள். இந்த புத்திசாலிக் கமரா முதல் 5 பிரேம்களில் தான் படம் எடுக்கப் பட்டுள்ளது எனக் கண்டறிந்து; 6வது பிரேமிற்கு ஓடிச்சென்று நிற்கும். படம் எடுக்கும் போது 6வது பிரேமிற்கு அப்பால் எவ்வித மாற்றமும் நிகழாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சரி! எடுத்து முடிந்த ஒரு சுருளை தவறுதலாகக் கமராவில் போடுகிறீர்கள். என்ன நடக்கும்? கமரா உடனே இது எடுத்து முடிக்கப் பட்ட ஒரு சுருள் என உங்களுக்கு அறியத்தரும். படங்களில் இனித் தவறுகள் இடம்பெற வாய்ப்புகள் இல்லை. எடுத்து முடிந்த சுருளை நீங்கள் கழுவி படங்களாகப் பெறும்போது, உங்களுக்கு "நெகடிவ்"; சுருளினுள்ளே போடப்பட்டுத் தரப்படும். இனி "நெகடிவ்" வைப் பார்க்க இயலாது. ஒரு படத்தில் நீங்கள் எடுத்த அத்தனை படங்களும் சிறிய அளவில் பதிவுசெய்து தரப்படும். மீண்டும் சில படங்கள் உங்களுக்குத் தேவையாயின் இதிலிருந்து தேர்வுசெய்து பிரதிக்குக் கொடுக்கலாம்.

கமராவில் உங்கள் ஒலியைப் பதிவு செய்யும் ஒலிப்பதிவுக் கருவி ஒன்றும் உள்ளது. உதாரணமாக *"Friends Wedding"* என்று நீங்கள் பதிவுசெய்தால் புகைப்படம் கழுவும் நிலையத்தில் அது உணரப்பட்டு, படத்தின்பின்புறம் அந்தச்செய்தி எழுதப்பட்டு உங்களுக்குத் தரப்படும். இத்துடன் புகைப்படம் எடுக்கப்பட்ட நேரமும், திகதியும் படத்தின் பின்புறம் பதியப் பட்டிருக்கும்.

இப்போதுள்ள 35mm கையடக்கக் கமராக்களை விட இவை மிகவும் சிறியவை. கையாள இலகுவானது. பல பக்கங்களைக் கொண்ட வழிகாட்டிகள் (*Instruction manual*) இனி இல்லை. புகைப்படங்களின் தரமும் அதிகமாக இருக்கும். மணிரத்தினத்தின் திரைப்படங்களைப் போன்ற புகைப்படங்கள் இனிக் கிடையாது. இந்த அற்புதமான தொழில் நுட்பம் *"Adantix"* என அழைக்கப்படுகிறது.

மார்ச் மாதம் 25ம் திகதி நடக்கின்ற "ஒஸ்கார்" விருது வழங்கும் வைபவத்தில் இந்தப் புதிய தொழில்நுட்பம் அறிமுகப் படுத்தப்படவுள்ளது. இனியென்ன கமராயைத் தூக்கிக் கொண்டு புறப்படவேண்டியது தானே!

~ கருனா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிக்கட் விளையாடும் ஒருவர் நூறு ஓட்டங்களைப் பெற்றால் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்ற பெருமையைப் பெறுகின்றார். நாடுகளுக்கிடையே நடைபெறும் 'டெஸ்ட்' போட்டிகளில் சதம் (*Century*) பேடுவது இடையிடையே நடைபெறும் நிகழ்வாகும். இரட்டைச் சதம் (*Double Century*) எடுப்பது அபூர்வமாகும். தனிநபர் ஒருவர் (*Triple Century*) எடுப்பது மிக மிக அபூர்வமாகும். 300 ஓட்டங்களுக்கு மேல் எடுப்பது என்பது இலகுவான காரியமல்ல. இச்சாதனையைப் புரிவதற்கு, காலநிலை, தொடர்ந்து ஆடுகளத்தில் நின்று ஆடும் திறமையும், நிதானமும், மேலதிக சக்தியும் அவசியமாகும். இதுவரை 13 முறை 300 என்ற எண்ணிக்கை நடத்தப்பட்டிருக்கிறது. இதுவரை 12 பேர் மட்டுமே செய்திருக்கின்றனர். இப் பன்னிருவரில் 5 இங்கிலாந்து வீரர்களும், 3 அவுஸ்திரேலிய வீரர்களும், 3 மேற்கிந்திய வீரர்களும், ஒரு பாகிஸ்தான் வீரரும் அடங்குவர். இச்சாதனைகள் இங்கிலாந்து மண்ணில் 5 முறையும், மேற்கிந்தியத் தீவுகளில் 5 முறையும், நியூசிலாந்து , அவுஸ்திரேலியா மண்ணில் தலா ஒவ்வொரு முறையும் நிலைநாட்டப்பட்டுள்ளது. சாதனை படைத்தோரும், அவர்களின் விபரங்களும் பின்வருமாறு:-

- சென்ற இதழின் தொடர்ச்சி -

~ வாசு ~



## இகரி சோபர்ஸ் (Gary Sobers)

மேற்கிந்திய தீவுகள் அணியைச் சேர்ந்த இவர், பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 1958ம் ஆண்டு பெப்ரவரி மாதம் கிங்ஸ்ரன் மைதானத்தில் தனது 21வது வயதில் ஆட்டமிழக்காது 365 ஓட்டங்களைப் பெற்று 20 வருடமாக இருந்த 'ஹட்டன்'இன் சாதனையை முறியடித்தார். இதுவே சோபர்ஸ் பெற்ற முதலாவது சதமாகும். இப்போட்டியில் பாகிஸ்தான் அணியில் நிபுணத்துவம் பெற்ற இரண்டு பந்து வீச்சாளர்கள் மட்டுமே இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜோன் எட்றிச் (John Edrich)

இங்கிலாந்து அணியைச் சேர்ந்த இவர், நியூசிலாந்து அணிக்கெதிரான போட்டியில் *Headingly* மைதானத்தில் 1965ம் ஆண்டு தனது 28வது வயதில் ஆட்டமிழக்காது 310 ஓட்டங்களைப் பெற்றார். வழமையாக விளையாடும் இங்கிலரந்து ஆட்டக்காரர் இருவர் காயமுற்று ஆடமுடியாத நிலை ஏற்பட்டபோது, எட்றிச் மீண்டும் அணிக்குள் சேர்க்கப்பட்டபோதே இது நடந்தது.





## பொபி சிம்ஸன் (Bobby Simpson)

அவுஸ்ரேலியா அணியைச் சேர்ந்த இவர், இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் *Old Trafford* மைதானத்தில், 1964ம் ஆண்டு தனது 28வது வயதில் 311 ஓட்டங்களைப் பெற்றார். இது சிம்ஸனின் முதலாவது சதமாகும். அதை தனது 52வது இனிங்சிலேயே பெற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரைன் லாறா (Brain Lara)

மேற்கிந்திய தீவுகள் அணியைச் சேர்ந்த இவர், இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் 1993ம் ஆண்டு *Antigua* மைதானத்தில் தனது 25வது வயதில் 375 ஓட்டங்களைப் பெற்று, 'சோபர்ஸ்'இன் 35 வருட சாதனையை முறியடித்தார். இவர் அடித்த பல பந்துகள் மைதானத்தில் சில இடங்களில் ஏற்பட்ட தடைக்காரணிகளால் எல்லைக் கோட்டைத் அடைய வில்லை. இல்லாவிடின் 400 ஓட்டங்களைப் பெற்று முதலாவது மனிதர் என்ற பெருமையைப் பெற்றிருப்பார். இருந்தும் முதல்தர கிரிக்கட் ஆட்டங்களில் 1994ம் ஆண்டு ஆட்டமிழக்காது பெற்ற 501 ஓட்டங்கள் இவரின் திறமைக்கு மேலும் கட்டியம் கூறுகின்றது.



## பொப் கெளவர் (bob Cowper)

அவுஸ்ரேலியா அணியைச் சேர்ந்த இவர், இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் மெல்போர்ன் மைதானத்தில் 1966ம் ஆண்டு தனது 25வது வயதில் 307 ஓட்டங்களைப் பெற்றார்.



## லோறன்ஸ் றோவ் (Lawrence Rowe)

மேற்கிந்திய அணியைச் சேர்ந்த இவர், இங்கிலாந்து அணிக்கெதிரான போட்டியில் 1974ம் ஆண்டு *Headingly* மைதானத்தில் தனது 25வது வயதில் 302 ஓட்டங்களைப் பெற்றார். இவர் தனது சொந்த ஊரான ஜமேக்காவிற்கு வெளியே பெற்ற ஒரேஒரு 'சதம்' இதுவாகும்.



## கிரஹாம் கூச் (Graham Gooch)

இங்கிலாந்து அணியைச் சேர்ந்த இவர், இந்தியா அணிக்கு எதிரான போட்டியில் லோட்ஸ் மைதானத்தில் 1990ம் ஆண்டு தனது 37வது வயதில் 333 ஓட்டங்களைப் பெற்றார். இங்கிலாந்து அணியின் தலைவர் ஒருவர் பெற்ற அதிகூடிய ஓட்டம் இதுவாகும்.

இலங்கை அணி உலகக் கோப்பைக்கைக்கான இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்று லாகூரில் நடைபெறவிருக்கும் இறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலியா அணியுடன் விளையாடவுள்ளது.

கிரிக்கட் உலகக் கோப்பைக்கான விளையாட்டு விவரணக் கட்டுரை அடுத்த இதழில் இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானொலி நிகழ்ச்சிகள்

"தமிழ்ச் சோலை" AM 1320 KHz
ஞாயிறு காலை 9.00-10.00

"கீதவாணி" CIRV 88.9FM
சனி காலை 8.00-10.00 / ஞாயிறு காலை 6.00-9.00
வாரநாட்கள் பி.ப. 8.30....

530 AM அலைவரிசையில்... "தமிழ் ஒலி"
ஞாயிறு மாலை 9.00 முதல் - 11.00 வரை

"ரேடியோ ஆசியா" தொடர்புகளுக்கு: (416) 298-4800

"தமிழோசை" தொடர்புகளுக்கு: (416) 431-7508

## கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

இப்பொழுது 24 மணிநேரமும் ஒரு சிறப்பலை மூலம் ஒலிபரப்பாகிறது.
B.B.C. "தமிழோசை" விரைவில்... தினசரி பி.ப. 8.25 மணிக்கு....

கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (416) 429-2374

## * ரோஜா வின் * சொற் சிலம்பம் *
## போட்டி இல: 6இன் முடிவு

குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று அதிஷ்டசாலிகள்:-
1. க. நிர்மலா (ஒட்டாவா) - $100, 2. இ. சுதன் (மிசுஸாகா) - $50,
3. வி. ரமேஷ் (ரொறன்ரோ) - $25

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 நி | 2 ர | ப | 3 ரா | 4 தி | ■ | 5 மா | 6 து |
| 6 க | சி | ■ | 8 சை | கை | ■ | 9 பொ | தி |
| ழ் | ■ | 10 சே | ய் | ■ | 11 ஊ | சி | ■ |
| ■ | ■ | 12 வி | யா | 13 பா | ரி | ■ | 14 எ |
| 15 தீ | வு | ■ | ■ | ல் | ■ | 16 கு | று |
| பா | ■ | 17 நி | த | மா | ற் | ற | ம் |
| 18 வ | டு | ண் | ■ | ■ | ■ | த் | 19 பு |
| ளி | ■ | 20 ஆ | த் | ம | ஜோ | தி | ■ |

உங்கள் பதில்கள் யாவும் ஏப்ரல் 10, 1996ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, 'ரோஜா' வின் முகவரிக்கோ அல்லது Faxக்கோ அனுப்பி வையுங்கள். ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. சரியான பதில்களை எழுதும் அதிஷ்டசாலிகள் மூவருக்கான **$100, $50, $25** பெறுமதியான பரிசுக் கூப்பன்களை **'எல். கிரிஷோத் ரைப்செட்டிங்'** ஸ்தாபனத்தினரால் அனுப்பிவைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடமிருந்து வலம்:**

*(1)* இறுதியாக அழிக்கப்பட்ட சிங்களத்தின் நம்பிக்கைக்குறிய வான்கலம். *(6)* முத்தம் கிடைக்காததால் குழம்பிவிட்ட இதழ். *(7)* செய்தி அல்லது புதினம். *(12)* இரக்கமற்ற மனம் படைத்தவர்கள். *(13)* சக்தியின் வடிவமான மங்கை. *(16)* முடியாட்சி காலத்து அரசன். *(17)* நெற்றியில் பொட்டு. *(23)* செவிப் புலம். *(24)* உயிரைக் குடிக்கும் நஞ்சு. *(25)* குழம்பிப்போன திசை. *(27)* நாகரீகமான அம்மா. *(28)* தேடி அலையும் செல்வம். *(32)* அதிகம் அல்லது செல்வம்.

**மேலிருந்து கீழ்:**

*(1)* தமிழர்களுக்குத் தடை செய்யப்பட்ட பசளை. *(2)* நீளத்தின் குறுக்களவு - குழம்பி விட்டது. *(3)* விதண்டாவாதம். *(4)* 24 மணித்தியாலத்தில் கிழிக்கப்படுவது. *(5)* அன்னை தர முடியாவிட்டால் ஆ தரும் அமுதம். *(8)* மரியாதைக் குறைவு - அதனால் குழப்பம். *(9)* மானின் ஒரு இனம் குழம்பிவிட்டது. *(14)* போகக் கூடாத தீய பாதை. *(15)* திருப்புகழ் பாடப் பெற்ற ஈழத்துத் தலம். *(16)* குழலினும் யாழினும் இனியது இவர்களின் சொல் என்கிறார் வள்ளுவர். *(18)* அனைத்தும் ஆனாலும் குழப்பம். *(19)* பாவலன் யாத்தது. *(26)* இது விளையாடும் பந்து என்றார்கள் தமிழரசு வாதிகள்.

**வலமிருந்து இடம்:**


*(11)* ஆட்டிப்படைக்கும் அரசாளும் கும்பல். *(20)* முக்கனியில் முதற் கனி. *(21)* புத்தி தடுமாற்றம். *(22)* குறும்பு. *(29)* இதை வித்துச் சித்திரமா? *(31)* இலங்கையின் அழிவுக்கு வழி கோலிய, கோலும், கோலப் போகின்ற காவிகள் சங்கம்.

**கீழிருந்து மேல்:**

*(10)* ஒரு இஸ்லாமிய பெயர். ஆற்றலுள்ள கடவுள். *(25)* காந்தி தேசம் கொன்ற காந்தியவாதி. *(30)* மங்கையின் மனதைக் கவர்ந்தவன்.

**முடிவுத் திகதி:**
ஏப்ரல் 10, 1996
விடைகளை தொலைநகலிலும் அனுப்பலாம்
416-425-2625

* றோஜா வின் *
**~ சொற் சிலம்பம் ~**
**போட்டி இல: 7**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INTERNATIONAL **INSURANCE** / FINANCIAL SERVICES

&

**BST INSURANCE BROKERS**

# சர்வதேச காப்புறுதி + நிதிச்சேவை



**A.VELUPPILLAI (Vel)**
**(Life Consultant & Insurance Broker)**
**காப்புறுதி ஆலோசகர்**

*ஆயுள்காப்புறுதி
*வீடு
*வாகனம்
*வியாபார
நிலையங்கள்
*சுகாதாரம்
*கல்வி

Eleven continuous years in Canadian Insurance Industry
Life Section - Under International Insurance Property Section- Under BST Insurance

கனடாவில் 11வருட காப்புறுதி அனுபவம்
சகல காப்புறுதி விளக்கங்களும் தமிழில் வழங்கப்படும்.

அழையுங்கள்:~


Tel: (416) 499-9596
Fax: (416) 499-9382

**2190 Warden Ave., Suite. 203,**
**Scarborough, ON. M1T 1V6**

எம்மால் சகல வித காப்புறுதிகளும், உலகில் சிறந்த காப்புறுதி ஸ்தாபனங்களில் நியாயமான விலையில் உத்தரவாதத்துடன், உங்கள் விருப்பத்திற்கமைய, உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வண்ணம் ஒழுங்கு செய்து வழங்கப்படும்.

**ஆயுள் காப்புறுதி விசேட ஆலோசனைகள் உண்டு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org